
# தென்னிந்தியப் பெருமக்கள்

629




N53
108710

# தென்னிந்தியப் பெருமக்கள்

(திருத்தம் செய்தது.)

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்
உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழாசிரியர்
**எஸ். எஸ். அருணகிரிநாதர்**
எழுதியது.

'அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்'
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.
பதிப்புரிமை] 1953 [விலை அணா 12

Revised Edition 1953

Wx
N53

TAMIL NADU ARCHIVES LIBRARY
108710
MADRAS

Printed at the Venkatesan Press, Madras-1

# முன்னுரை

'அறிவிற் சிறந்த நமது நாட்டுப் பெரியார்களின் சரிதங்களைப் படிப்பதால் நம் மாணவர்கள்—எதிர்கால தமிழ் மக்கள்—மிகவும் நன்மை அடைவார்கள்,' என்பது பேரறிவாளரான பூண்டி அரங்கநாத முதலியார் எம். ஏ., அவர்களின் கருத்தாகும்.

அப்பெரியாரின் கருத்தை நான் பொன்னே போலப் போற்றுவதற்கு அறிகுறியாக இந்தத் '**தென்னிந்தியப் பெருமக்கள்**' என்னும் புத்தகத்தை எழுதி மாணவருலகத்திற்கு அனுப்புகின்றேன். இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவர்கள் நன்மை அடைவார்கள் என்று யான் சொல்லவும் வேண்டுமோ? வயதேறிய மக்களும் இதைப் படிப்பதால் சிறந்த ஊக்கமும், நல்லுணர்ச்சியும் பெறுவார்கள் என்பது என் கருத்தாகும்.

இப்புத்தகத்தில் குறிக்கப்பெற்ற அறம் வளர்த்த வள்ளல் காஞ்சிப்புரம் பச்சையப்ப முதலியார், ஊக்கத்தின் உறைவிடமாகிய திருவாரூர் சர். தி. முத்துசாமி ஐயர்: ஆகிய இவர்களிருவரைப்பற்றியும் தமிழ் நாடு ஒருவாறு அறிந்தே இருக்கின்றது. இவர்கள் இருவரும் தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களாவர். நமது நாட்டு மக்களால் இவ்விரு பெரியார்களும் என்றும் மறவாமல்

போற்றுதற்குரிய பெருங்குணம் படைத்தவர்கள் என்பதில் தடையில்லை. சுருங்கக் கூறவேண்டுமானால், இவ்விருவரும் எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமானவர் என்று கூறுதலே மிகப் பொருத்தமாகும்.

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

---

## பொருளடக்கம்

---

1. காஞ்சிப்புரம் பச்சையப்ப முதலியார்
2. திருவாரூர் சர். தி. முத்துசாமி ஐயர்

# 1. பச்சையப்ப முதலியார்

## 1. முயற்சி—'அறஞ்செய விரும்பு'

இயற்கை வளங்களுக்கு உறைவிடமாயுள்ள நமது தமிழ்நாடு தொன்று தொட்டு அறத்துறையில் சிறப்புற்று ஓங்கி வருகின்றது என்பது எவரும் அறிந்த செய்தியேயாம். நமது நாட்டில் வெளிவந்துலவும் நூல்கள் அனைத்தும் அறச்செயலைச் சிறப்பித்துக் கூறுகின்றன. நம் பெருமக்கள் அறத்தை முப்பத்திரண்டு வகையாக வரையறுத்துக் கூறியிருத்தல் ஒன்றினாலேயே நம்மனோர் அறத்தில் எவ்வளவு தோய்ந்தவரா யிருந்தனர் என்பதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல அறியலாம்.

அறிவால் சிறந்து விளங்கிய நமது அவ்வையாரும் தம்முடைய 'ஆத்தி சூடி' என்னும் நூலின்கண் அறத்தின் தேவையைக் கூறவேண்டி, 'அறஞ்செய விரும்பு,' எனக் கூறியுள்ளார். இன்னும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும், 'அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம், புறத்த ; புகழும் இல,' என்றும், 'அறத்தினூஉங் காக்கமு மில்லை ; அதனை, மறத்தலி னூங்கில்லை கேடு,' என்றும் நன்கு உரைத்திருக்கின்றார். முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும், 'பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே' என்று இடித்துக் கூறி அறம் செய்ய

வேண்டுவதன் முக்கியத்தை மக்களுக்கு மிகத் தெளிவு பட விளக்கியுள்ளார்.

இவ்வுலகத்தில் உள்ளவர் ஒவ்வொருவரும் தத் தம்மாலான அறங்களைச் செய்து கொண்டே வருதல் வேண்டும். உயிருக்கு உற்ற துணையாய் இருப்பவை அவரவர்கள் செய்யும் அறமேயாம். அறம் செய்வோ ரின் பருவுடம்பு அழிந்து விட்டாலும், அவர்தம் புக ழுடம்பு உலகம் உள்ளளவும் அழியாது நிலை நிற்கும். ஆகவே, அறத்தைச் செய்கிறவர்கள், இறந்தும் இறவாத வர்களே ஆகின்றார்கள்.

அறம் செய்வதில் சாதி, மதம், நிறம், இனம் முத லிய வேறுபாடுகளைப் பாராட்டாது, கடவுளால் படைக் கப்பட்ட எல்லா உயிர்களையும் நாம் நமது உயிரைப் போலவே பாவித்து, அவைகளுக்கு நம்மாலான உதவி களைச் செய்ய வேண்டுவது முக்கியமாகும்.

நமது தமிழ் நாட்டில் தம் நலங்கருதாமல் அறம் செய்தவர் எண்ணிறந்தவர் ஆவர். அவர்களில் மிகவும் சிறப்புடையோர் பாரி, ஓரி, நள்ளி, ஆய், குமணன், பேகன் போன்ற பலராவர். இவர்களைப் போன்றே இன்னு மநேகரும் செயற்கரியவான காரியங்களைச் செய் திருக்கின்றனர். பேகன் என்னும் வள்ளல் மயில் ஒன்று குளிரினால் வருந்திக் கொண்டிருந்ததைக் கண்டு, மனம் பொறுதவனாகித் தன் குளிரையும் பொருட்படுத்தாமல், தான் போர்த்துக் கொண்டிருந்த மேற் போர்வையை எடுத்து, அதன் சிறந்த மேனியின் மீது போர்த்து, அதன் குளிரைப் போக்கினான் என்பதைத் தமிழ் உலகம் அறிந்தே இருக்கின்றது. ஆனால், அறம் வளர்க்க விரும்பு

வோர் முதலில் தாங்கள் நல்ல முன்னேற்றம் பெற வேண்டும்.

மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு நல்ல உழைப்பு இன்றியமையாததாய் இருக்கின்றது. இதைக் குறித்தே அவ்வையாரும், 'ஊக்கமது கைவிடேல்,' என்று கூறியுள்ளார். இன்னும் திருவள்ளுவநாயனுர் முயற்சியைப் பற்றிக் கூறுங்கால், 'தெய்வத்தா னுகா தெனினு முயற்சி தன், மெய்வருத்தக் கூலி தரும்,' என்றும், 'ஊழையு முப்பக்கங் காண்பர், உலேவின்றித் தாழா துஞற்று பவர்,' என்றும் கூறிய மொழிகள் பொன்னே போலப் போற்றற் குரியனவாம். உலகத்தில் ஏழைகளாய் இருந்து முன்னுக்கு வந்தவர் அனைவரும், தம்முடைய விடா முயற்சியினுலேயே பெறற்கரிய பெரும்பேற்றைப் பெற்றுப் பல்லோராலும் மிக வியந்து கொண்டாடப் படுகின்றனர். அத்தகையோருடைய வரலாறுகள் படிப்பவர்களுடைய உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி, அவர்களை மேன்மேலும் முயலுமாறு தூண்டுகின்றது.

அறம் பல ஆற்றுவதிலும், விடா முயற்சியிலும் சிறந்து தென்னிந்தியாவின் திலகமாக விளங்கிய காஞ்சிப்புரம் பச்சையப்ப முதலியாருடைய வாழ்க்கை வரலாற்றை இனி நாம் நோக்குவோம்.

## 2. பச்சையப்ப முதலியாரின் பெற்றோர்கள்

பாலாறு வளஞ் சுரக்கும் பதிகளிலே சிறந்தது காஞ்சிமாநகரம். இந்த நகரம் சான்றோரை உடைத்தான தெண்ணீர் வயற்றொண்டை நன்னுட்டிற்கு ஒரு திலகம்போல விளங்குகின்றது. அன்றியும், இது பன்னெடுநாள் தொடங்கியே சிறப்புற்றோங்கி இருக்கிறது

காளிதாச மகாகவியும், 'நகரங்களில் சிறந்தது காஞ்சிமா நகரம்,' எனக் கூறியிருக்கின்ருர். இது பல்லவ மன்னர்களுக்குத் தலை நகராய் விளங்கியது. இது நெய்தல் தொழிலுக்குப் பெயர் பெற்றதாகும்.

இத்தகைய சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் கொண்டிலங்கும் காஞ்சிமா நகரின்கண், அநேக ஆண்டுகளுக்கு முன்னர், விசுவநாத முதலியார் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவருடைய மனைவியாரின் பெயர் பூச்சியம்மாள் என்பது. தம்பதிகள் இருவரும் தங்களுக்குள் எவ்வித மாறுபாடும் இன்றி, இல்லறம் என்னும் வான் சகடத்தை இனிது நடத்திக்கொண்டு வந்தனர். இவ்விருவரும் பல அருங்குணங்களைக் கைக்கொண்டு விளங்கினர். இவர்கள் அதிக செல்வம் படைத்தவர்களாகவும் இல்லை; ஒன்றுமில்லாத பரம ஏழைகளாகவும் இருக்கவில்லை. இவர்களுக்கு ஒரு சிறு வீடும் கொஞ்சம் நிலமும் இருந்தன. ஆகவே, இவர்கள் நடுத்தரமான வாழ்க்கையை நடத்தக் கூடியவர்களாய் இருந்தார்கள். இவர்கள் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

விசுவநாத முதலியாருக்கும், பூச்சியம்மாளுக்கும் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. அவ்விரு குழந்தைகளில் ஒன்றின் பெயர் சுப்பம்மாள் என்பது; மற்ருென்றின் பெயர் அச்சம்மாள் என்பது. அவ்விரு குழந்தைகளும் சிறப்புடன் வளர்ந்துகொண்டு வந்தனர். ஆனல், விசுவநாத முதலியாரும் பூச்சியம்மாளும் ஓர் ஆண் மகவு இல்லையேயென வருந்திக்கொண்டிருந்தார்கள். பின்னர், பூச்சியம்மாள் கருப்பவதியார் ஆயினர். அதைக் கருதிப் பூச்சியம்மாளும் விசுவநாத முதலியாரும்

ஆனந்தமடைந்தனர். 'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்,' என்னும் பழமொழி உண்மையே அன்றோ? திடீரென்று விசுவநாத முதலியார் நோய்ப் பட்டுக் குணமடையாமல், இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். கணவர் இறந்த நிகழ்ச்சி பூச்சியம்மாளுக்குப் பெரிதும் மனத்துன்பத்தை உண்டு பண்ணியது. கணவரை இழந்த அவ்வம்மையார் ஆதரவின்றி நடுக் கடலில் திசை தடுமாறிய ஒரு மாலுமிக்கு ஒப்பானார். ஆகவே, அவ்வம்மையார் பற்றிப் படரக் கொழு கொம் பில்லாத கொடியைப்போல அலைந்த மனத்தினை உடை யவரானார். இது நிற்க.

சென்னைக்கு வடமேற்கே சுமார் இருபத்தைந்து மைல் தூரத்தில் பெரியபாளையம் என்னும் ஓர் ஊர் உளது. அவ்வூரிலுள்ள அம்மன் கோயிலுக்கு ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் ஏராளமான மக்கள் சென்னையி லின்றும், மற்றுமுள்ள சுற்றுப் புறங்களினின்றும் செல் வது பலபேர் அறிந்த செய்தியாகும். விசுவநாத முதலி யார், தாம் உயிருடன் இருந்த போது, தம் மனைவியா ருடன் பெரிய பாளையத்துக்குச் செல்வது வழக்கம்.

பெரிய பாளையத்தில் ரெட்டி ராயர் என்னும் பெய ரினைக் கொண்ட கனவான் ஒருவர் இருந்தார். அவர் ஆறுகாட்டுச் சுபேதாருடைய பிரதிநிதியாகப் பெரிய பாளையத்தில் அதிகாரஞ் செலுத்திக் கொண்டிருந்தார். அவருக்கும், விசுவநாத முதலியாருக்கும் நட்பு ஏற்பட்டி ருந்தது. ஆகவே, கணவரை இழந்த பூச்சியம்மாள் தம் இரு பெண் குழந்தைகளையும் தம்முடனழைத்துக் கொண்டு பெரிய பாளையத்திற்குச் சென்று, கணவரின்

நண்பரான ரெட்டி ராயரிடத்தில் அடைக்கலம் புகுந்தார். ரெட்டி ராயரோ, அன்பு, அருள், அடக்கம், உண்மை முதலிய பல நற்குணங்களைத் தம்மகத்தே கொண்டு விளங்கியவர் ஆவர். ஆகவே, அவர் தம் நண்பருடைய மனைவியாருக்கு இடமளித்து, அந்த அம்மையாருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து வந்தார். ஈண்டு, இது, 'காலத்தினாற் செய்த நன்றி' யாகும்.

விசுவநாத முதலியார் இறந்த போது பூச்சியம்மாள் கருப்பவதியாரா யிருந்தார் என்று கூறினேமல்லவா? அந்த அம்மையார் இங்கிலிஷ் 1754-ஆம் ஆண்டில் பெரிய பாளையத்திலிருந்த ரெட்டி ராயர் பாதுகாப்பில் ஒப்பற்ற ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தார். அக்குழந்தையே உலகம் புகழும் **பச்சையப்ப முதலியார்** என்றறிக.

## 3. பச்சையப்ப முதலியாரின் இளமைப் பருவம்

நாம் மேலே கூறிய ரெட்டி ராயர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையாளரானபடியால், அவர் தம் நண்பருடைய மனைவியாராகிய பூச்சியம்மாளைத் தம் சொந்த சகோதரியாரைப் போலப் பாவித்து, அவ்வம்மையாரின் மக்களைத் தம் குழந்தைகளைப் போலவே கருதிக் காப்பாற்றிவருவாராயினர். பூச்சியம்மாள் தமக்கு ஓர் ஆண் மகவு பிறந்ததைக் குறித்து மகிழ்ந்தனரேனும், கணவர் தம் குழந்தையைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என வருந்தினர். குழந்தையை அவ்வம்மையார்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். பச்சையப்பருக்கு ஐந்து ஆண்டுகள் நிரம்பின. ரெட்டி ராயர், கல்வியின் முக்கியத்தை உணர்ந்தவராதலின், 'எண்ணெழுத்து இகழேல்,' 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு,' 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்,' 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்,' என்னும் திருவாக்குகளை நினைத்துப் பச்சையப்பருக்குக் கல்வி கற்பிக்கக் கருதி, அவருக்குத் தெலுங்கு மொழியைக் கற்பிக்கலானார். இவ்வாறு பச்சையப்பர் தெலுங்கு மொழியைப் பயின்று வருகையில், அவரது குடும்பத்திற்கே ஊன்று கோலைப்போல இருந்த ரெட்டி ராயர், 'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பதற்கிணங்கத் திடீரென மரணமடைந்தார். இத்துக்க நிகழ்ச்சி பூச்சியம்மாளின் மனத்தில் பெருங் கலக்கத்தை உண்டாக்கியது. ஆகவே, அவர், 'இனிமேல் நம்மை ஆதரிப்பார் ஒருவரும் இல்லையே!' என்று எண்ணி வருந்தினார்.

தம்முடைய நிலைமை இவ்வாறாகவே, பூச்சியம்மாளும் அவருடைய மக்களும் துன்பப்பட வேண்டியவர்களானார்கள். ரெட்டி ராயருடைய குடும்பமும் மிகவும் துன்ப நிலையை எய்தியது. ஆகவே, பெரிய பாளையத்தில் பூச்சியம்மாளை ஆதரிக்கக் கூடியவர் ஒருவரும் இலராயினர். பூச்சியம்மாளின் நிலைக்கு இரங்கிய சில பெரிய மனிதர்களும், ரெட்டி ராயருடைய மனைவியாரான வேங்கடம்மாளும் பூச்சியம்மா

ளுக்குத் தேறுதல் கூறியதோடு, அவர் சென்னைக்குச் சென்று அங்கு எவருடைய ஆதரவிலாவது இருந்து வாழ்வது நலமாகுமெனவும் கூறினர். அவர்கள் அவ்வாறு கூறிய வார்த்தைகள் பூச்சியம்மாளுக்கு நல்லனவாகவே தோன்றின.

## 4. பூச்சியம்மாள் சென்னைக்கு வருதல்

பூச்சியம்மாள் தம் குமாரத்திகளான சுப்பம்மாளையும், அச்சம்மாளையும், தம் புதல்வரான பச்சையப்பரையும் அழைத்துக்கொண்டு, தமக்கிருந்த கொஞ்சம் சொத்துக்களுடன் சென்னையை அடைந்து, கோட்டைக்கு வடமேற்குத் திக்கிலிருக்கும் ஒற்றைவாடைக்கருகில் உள்ள சாமி மேஸ்திரி வீதி என்னும் ஒரு சிறிய தெருவில் வாழ்ந்து வர ஆரம்பித்தார். சென்னை நகரமானது இவ்வமயம் இருப்பதைப் போல, மாட மாளிகைகளாலும், கூட கோபுரங்களாலும் அக்காலத்தில் விளங்கிக்கொண்டிருக்க வில்லை. ஆனாலும் காஞ்சிப்புரம், பெரிய பாளையம் என்னுமிடங்களைப் பார்க்கிலும் அப்போதும் அஃது எத்தனையோ பங்கு உயர்வுள்ளதாகச் சிறந்திருந்தது என்று சொல்லலாம்.

சென்னையில் தம்மை ஆதரிக்கக் கூடியவரைப் பூச்சியம்மாளுக்குத் தெரியவில்லை. ஆகவே, அந்த அம்மாள் நடுக்காட்டில் கண்களைக் கட்டி விடப்பட்டவரின் நிலையினராய்த் தமக்கு நேர்ந்த கதியை எண்ணித் தம் மக்களைக் காப்பாற்றுவதெப்படி என்று இரவும் பகலும் வருந்திய வண்ணமிருந்தார். அவ்வம்மையார் இவ்விதம் வருந்தும் பொழுது ஒரு நாள் அவர்

வீட்டுக்கு அருகில் வாழ்ந்து வந்த ஒருவன் அவருக்குத் தன் முதலாளியினுடைய குணப்பெருமைகளைக் கூறிய தோடு, அவரை அண்டினால், அவர் தம்மாலான உதவி களைச் செய்ய முன்வருவார் என்றும் தெரிவித்தான்.

அவன் வியந்து கூறிய பெருமகனார் தம்மையும் தம் மக்களையும் ஏற்று ஆதரிப்பார் என்ற எண்ணம் பூச்சியம்மாளின் மனத்திடையே உதித்தது. ஆகவே, அவர் அப்பெருமகனாரை அணுகி, அவரிடம் தம் குறை கள் பலவற்றையும் தொடர்ச்சியாகக் கூறிமுறையிட்டுக் கொண்டார். அவ்வம்மையாரின் மொழிகளைச் செவி மடுத்த பெருமகனார் பெயர் பௌனி நாராயணப் பிள்ளை என்பதாகும். அவர் பௌனி என்ற துரைமகனாருக் கும், அவருக்குப் பிறகு அவருடைய மனைவியாருக்கும் "துவிபாஷி"யராயிருந்து வேலை பார்த்து வந்ததின் நிமித்தம் அவருக்கு அப்பெயர் வழங்கலாயிற்று. இதோடு, அவர் நெய்தவாயல் என்னும் ஊரைச் சேர்ந்தவராதலின், நெய்தவாயல் பௌனி நாராயணப் பிள்ளை என்னும் பெயரையும் பெற்றிருந்தார்.

நெய்தவாயல் பௌனி நாராயணப் பிள்ளை அவர் கள் பெரும் பணக்காரர். அவருக்குப் புகழ் பெருகி இருந்தது. அவர் இரப்போருக்கு இல்லை என்னாது கொடுக்கும் நேர்மையாளர்; உள் ஒன்று வைத்துப் புற மொன்று பேசாத சத்திய சீலர். அவர் ஓர் அளவுக்கு ஆங்கிலமும் தமிழும் கற்றிருந்தார். அவர் இயற்கையி லேயே புத்தி நுட்பம் வாய்ந்தவராயுமிருந்தார். ஆகவே, அவர் தமக்கிருந்த அறிவைக்கொண்டு ஆங்கிலேய வர்த்தகர்களுக்கும், சுதேச வர்த்தகர்களுக்கும் இடை

யில் துவிபாஷியர் தொழிலைச்செய்து, அதனால் பெருஞ் செல்வத்தைத் திரட்டி வந்தார். அவருக்குப் பல ஆங்கிலேயப் பெருமக்களிடம் நட்பு ஏற்பட்டிருந்தது. அவர் தாமே வாழவேண்டுமென்னும் கொள்கையினரா யில்லாமல் தம்மை அண்டிய பலருக்கும் தம்மால் ஆன உதவிகளைச் செய்து வந்தார். "மனிதப் பிறவி எடுத்ததன் பயன் பிறருக்குதவி செய்தலேயாகும்" என்பதை அவர் நன்குணர்ந்தவராதலால், அவர் பிறரிடமிருந்து கைம்மாறொன்றுங் கருதாது, அவர்கட்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வந்தனரென்பது கவனிக்கத் தக்கதாம். அதோடு இவ்விடத்தே அவரது மற்றைய செயலொன்றினையும் நாம் நோக்குவது முக்கியமாகும். பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள் தமக்குச் செங்கற்பட்டு மாவட்டத்தில் நவாப்பினிடமிருந்து சுரோத்திரிய மாகக் கிடைத்த மெதவாயல் என்னும் ஊரை அவ்விடத்திலிருக்கும் ஓர் அறச்சாலைக்குப் பயன்படும்படி அளித்து விட்டார்.

இத்தகைய நற்குண நற்செயல்களைக் கொண்ட பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள், பற்றிப் படரக் கொழு கொம்பில்லாத கொடியே போன்று உதவுவாரின்றி இருந்த பூச்சியம்மாள் நிலையை அறிந்ததும் இரக்கம் கொள்ளாமல் போவாரோ! பிள்ளையவர்கள் பூச்சியம்மாளுக்கு ஆறுதல் கூறி, அவரைத் தம் உடன் பிறந்த சகோதரியாரைப் போலக் கருதிக் காத்து வந்தார். பூச்சியம்மாள் தம்மிடமிருந்த பொருளை நாராயணப் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அதனை அவர் பலவகையிலும் வளரச்செய்து, பூச்சியம்மாளுக்கும் அவருடைய மக்களுக்கும் வேண்டிய நலத்தைத்

தேடுவாராயினர். பச்சையப்பரை அவர் கல்வி பயிலச் செய்தார். அவரிடம் வந்து சேர்ந்தது முதல் பச்சையப்பர் படிப்படியாக மேன்மை அடையலானுர். பிள்ளையவர்கள் பச்சையப்ப முதலியாரை முன்னுக்குக் கொண்டுவரும் வகையில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். அவ்வாறே பச்சையப்பரும் தமக்குப்பல வகையிலும் உதவி புரிந்துவந்த பிள்ளையவர்களைத் தம்மைப் பெற்ற தந்தையைப் போலப் பாவித்து அவரிடத்தில் நன்றியறிதலுடன் நடந்து வந்தார். பச்சையப்பரின் நற்குணங்களைக் கண்ட பிள்ளையவர்களும் அவரிடம் அதிக அன்பு கொண்டு அவரைத் தமது சொந்த மகனைப் போலவே கருதி வந்தார். அதனுல், பச்சையப்பர் வணிக முறைகளையும் துவிபாஷி வேலை முறைகளையும் அறிந்துகொள்ளக் கூடியவரானுர். எவ்வித வாய்ப்பையும் அவர் வீணுக்காமல், பயன் அளிக்கத் தக்கதாகவே செய்துகொண்டார். இதனுலும் பிள்ளையவர்களுக்குப் பச்சையப்பரிடத்தில் அளவு கடந்த பிரியம் ஏற்பட்டது என்று சொல்லலாம்.

இனிமேல் பச்சையப்பரின் சகோதரிமார்களைக் குறித்துச் சற்று ஆராய்வோம். பச்சையப்பருக்குச் சுப்பம்மாள், அச்சம்மாள் என்னும் பெயருடைய இரண்டு தமக்கைகள் இருந்தார்கள் அல்லவா? அவ்விருவரும் மணப் பருவம் அடைந்தனர். ஆகவே, அவர்களுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டியதாயிற்று.

பச்சையப்ப முதலியாரின் முதல் தமக்கையாரான சுப்பம்மாள் புங்கத்தூர்த் தெய்வநாயக முதலியார் என்பவரை மணம் புரிந்துகொண்டார். பிறகு சுப்பம்மா

ளுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அம்மகளின் பெயர் அய்யாளம்மாள் என்பதாகும். சுப்பம்மாளின் கணவர் திடீரென்று இறந்துபோகவே, சுப்பம்மாள் தம் குமாரத்தியை அழைத்துக் கொண்டு தம் சொத்துக் களுடன் தம் தாயகம் வந்து சேர்ந்தார். பச்சையப் பரின் இரண்டாம் தமக்கையாரான அச்சம்மாள் என் பவர், கூடலூர்த் தெய்வநாயகமுதலியார் என்பவரைக் கலியாணஞ் செய்துகொண்டார். அச்சம்மாளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அம்மகவின் பெயர் முத்தையா முதலியார் என்பதாகும். பிறகு அச்சம்மாள் தம் இளம் வயதிலேயே இறந்தார்.

## 5. தொழிலில் இறங்குதல்

பச்சையப்ப முதலியார் சிறு வயது முதற் கொண்டே அன்பு, அடக்கம், உண்மை முதலிய பல நற்குணங்களைக் கொண்டு விளங்கி வந்தாரன்றோ? அக் குணங்கள் அவருடைய வயதோடு கூடவே வளர்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து வந்தன. அவருக்குத் தக்க வயது வந்தவுடன் அவர் பீங்கான் கடையில் தரகராக இருந்து வேலை பார்த்துவர ஆரம்பித்தார். அப்பீங்கான் கடைக்காரர்கள் சரக்குகளை மொத்தமாக வாங்கி வைத் துக்கொண்டு, சில்லறையில் விற்பது வழக்கம். அச் சரக்குகளை வாங்குவதற்காகப் பல ஐரோப்பியர்கள் வருவார்கள். கடைக்காரர்களுக்கும் ஐரோப்பியர்களுக் கும் பச்சையப்பர் துவிபாஷியராய் இருந்துவந்தார். முதலியார் இயற்கையிலேயே நற்குண நற்செயல்களை மேற்கொண்டிருந்தவரானபடியால், எல்லோரும் அவரை நேசிக்கலாயினர். இவ்வாறு அவர் திறமை

யுடன் வேலை செய்து, அதன் பயனாய் அளவற்ற திரவியத்தைச் சம்பாதிக்க வழியுடையவரானார். முதலியார் அவர்களுடைய தாய்மொழி தமிழாகும். அவர் தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் ஒரு சிறிது பயிற்சி பெற்றிருந்தமையினால் அப்பயிற்சி அவருக்குப் பெரிதும் உதவியாயிருந்தது.

பச்சையப்ப முதலியார் இளமை முதற்கொண்டே தம் கருத்தை அறவழியில் செலுத்தினார். 'கொடையும் தயையும் பிறவிக்குணம்,' என்பதற்கேற்ப, பச்சையப்பர் கொடையும் தயையும் பிறவிலேயே பெற்று விளங்கினார் என்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது. அவர் தாமாகவே பொருள் தேட ஆரம்பித்த கால முதற்கொண்டே உயிருக்கு உறுதி பயப்பனவாகிய பலவகை அறங்களைச் செய்து வருவாராயினர். அவர் தம் தாயாரையும் இதற் கிடையில் மறந்தவரல்லர். தாயாருக்கு வேண்டிய பண உதவியையும் அவர் அவ்வப்போது செய்த வண்ணமே இருந்தார். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' 'தந்தை தாய்ப்பேண்,' என்பனவற்றின் பொருளினை அவர் நன்கு உணர்ந்திருந்தாராதலினால், அவர் தம் தாயாரிடத்தும் தந்தைக்கு ஒப்பான நிலையில் இருந்த நாராயணப்பிள்ளை அவர்களிடத்தும் அன்பு, கீழ்ப்படிதல் முதலியவைகளை வெளிப்படையாகக் காண்பித்து வந்தார்.

பச்சையப்பர் இவ்வாறு இருந்து வருகையில் அவருக்கு இராணுவத் தலைவர் ஒருவரிடத்துப் பழக்கம் ஏற்பட்டது. அந்தப் பழக்கம் நாளடைவில் முற்றியது. பச்சையப்பரின் அறிவாற்றல்களைக் கண்ட அந்த

இராணுவத் தலைவர் தம்மிடம் அவருக்கு ஒரு வேலை கொடுத்தார். அவ்வேலையை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட பச்சையப்பர், அதைக் குறித்துத் தம் தாயாருக்கும், தம்மைக் காப்பாற்றி வந்தவரான நாராயணப் பிள்ளை அவர்களுக்கும் தெரிவித்தால் அவர்கள் தம் கருத்தை அங்கீகரிக்க மாட்டார்கள் என்று கருதி, அவர்களிடத்து ஏதும் மொழியாமலே, அந்த இராணுவத் தலைவருடன் சென்னைக்கு வடக்கே உள்ள பாலவாயல் சத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். இங்குதான் அந்த இராணுவ அதிகாரி தம் படைகளுடன் தங்கி இருந்தார். 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை,' என்பதன் கருத்தை அறிந்திருந்த பச்சையப்பர், பெரும் பொருளைத் திரட்டிப் பலவித அறங்களை மேலும் மேலும் இயற்ற வேண்டுமென்ற பேரவாவினைக் கொண்டிருந்தவராகையினால், அவர் தம் தாயாருக்கும், நாராயணப் பிள்ளை அவர்கட்கும் தாம் பாலவாயலுக்குப் போவதைப் பற்றி உணர்த்தவில்லை. தம் தாயாருக்கேனும், தமக்குப் பல வகையிலும் உதவி புரிந்து வந்த பிள்ளையவர்களுக்கேனும் மனவருத்தத்தை உண்டாக்க வேண்டும் என்பது பச்சையப்பரின் கருத்தன்று.

இவ்வாறு பச்சையப்பர் பாலவாயல் சத்திரத்திற்குச் சென்றமை பூச்சியம்மாளுக்குத் தெரிந்தது. தெரியவே, அந்த அம்மாள் மனம் வருந்தி நாராயணப் பிள்ளை அவர்களிடம்சென்று, பச்சையப்பரைப் பற்றி முறையிட்டுக் கொண்டார். அதன் மேல் பிள்ளையவர்கள் பாலவாயல் சத்திரத்துக்குச் சென்று, அங்கே தங்கி இருந்த இராணுவத் தலைவரைக் கண்டு, பச்சையப்பரைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டார். அந்த

இராணுவத் தலைவர் பிள்ளை அவர்களுடைய அருமை பெருமைகளை நன்கு உணர்ந்திருந்தவராகையால், பச்சையப்பரை அவர் விரும்பிய வண்ணம் அவருடன் அனுப்ப இசைந்தார். பிள்ளையவர்கள் அந்த இராணுவத் தலைவரின் அநுமதியைப் பெற்றுப் பச்சையப்பரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வந்தார். பூச்சியம்மாள் தம் குமாரரைக் கண்டு மகிழ்ந்து பிள்ளையவர்களை வாயார வாழ்த்தினர்.

பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள் பச்சையப்பரைத் தென்னாட்டில் ஆட்சி செய்துவந்த நிக்கலஸ் துரையிடத்தில் வேலைக்கு அமர்த்தினர். அவரிடத்தில் பச்சையப்பர் துவிபாஷியாராய் இருந்து, சிறிது பொருள் சம்பாதித்தார். அதை அவர் பிள்ளையவர்களிடத்தில் சேர்த்து வைத்தார்.

## 6. பச்சையப்பர் திருமணம்

பச்சையப்பர் மணம் செய்துகொள்ளும் பருவத்தை அடைந்தார். அப்போது அவருடைய உற்றுரும், உறவினரும் நாராயணப் பிள்ளை அவர்களும் அவருக்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டுமென்று எண்ணி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வந்தார்கள். பச்சையப்பருடைய மூத்த தமக்கையாரான சுப்பம்மாளுக்கு அய்யாளம்மாள் என்னும் ஒரு புதல்வியார் இருந்தார் என்று கூறினேம் அல்லவா? அப்பெண்மணியார் அப்போது கலியாணத்திற்கேற்ற வயதை அடைந்திருந்தார். எனவே, பச்சையப்பரின் உறவினரும், நாராயணப் பிள்ளை அவர்களும் வெளியிடத்தே பெண்தேட வேண்டுமென்ற அவசியம் இல்லை

என்று எண்ணி அப்பெண்மணியாரை அவருக்கு மணம் முடித்து விடுவதுதான் சரி என்று தீர்மானித்தார்கள். அவ்வேற்பாட்டுக்குப் பச்சையப்பரும் இணங்கினர். பிறகு பச்சையப்பருக்கும், அய்யாளம்மாளுக்கும் விவாகம் இன்பகரமாக நடைபெற்றது. முதலியார் தம்முடைய விவாகத்திற்காக அதிகமாகப் பொருளைச் செலவழிக்கவில்லை. ஆனல், இக்கலியாணத்தில் நண்பர், உறவினர்களெல்லோரும் தக்கபடியே வரவேற்கப் பெற்று மரியாதை செய்யப்பெற்ருர்கள்.

முதலியார் அவர்களுக்குப் பண வருவாய் அதிகமாயிருந்த போதிலும், அவர் தம்முடைய கலியாணத்தின் பொருட்டு அதிகப் பணம் செலவிடாமைக்குக் காரணம். அவர் மனமானது அறவழியில் ஈடுபட்டிருந்ததே ஆகும். வீணை ஆடம்பரத்தை அவர் விரும்பவில்லை.

பச்சையப்பர் காஞ்சி ஏகாம்பரர் ஆலயத்தில், பல திருப்பணிகளைச் செய்தார். இவ்வாறு பச்சையப்பர் ஆலயத் திருப்பணிகளிலும், வேறு அறம் பற்றிய வேலைகளிலும் ஈடுபட்டுத் தம் பொருள்களைச் செலவழித்து வரலாயினர். அதனல், அவருடைய பேரும் புகழும் பல பக்கங்களிலும் பரவ ஆரம்பித்தன. தமக்கு ஏற்பட்ட புகழைக் கண்டு அவர் செருக்கடைந்தாரல்லர். சிறியரே மதிக்குமிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே ஒரு சிலர் தம்மையும் அறியாமல் இறுமாப்புக் கொண்டு விடுகின்றனரன்றே? பச்சையப்பரோ, அவ்வாறு இல்லாது, செல்வம் பெருகப்பெருக, நன்னடக்கைகளிலும் தாம் பெருகியவரானர். அவருக்குப் பெரியோரிடம் அன்பு அதிகமாகிக் கொண்டே வந்தது. பச்சையப்பர், நாராயணப்

பிள்ளை அவர்கள் தமக்குப் புரிந்த பல உதவிகளையும் மறவாது அவரைத் தம் தந்தையாருக்கு மேலாகப் பாராட்டி, அவருடைய மனம் கோணுமல் நடந்து வந்தார். இஃதன்றோ பெருந்தகையாளரின் அரிய செயல்!

## 7. நடை உடை பாவனைகள்

பச்சையப்ப முதலியார் உயரமான தோற்றத்தைப் பெற்றிருந்தார். அவர் தேகக் கட்டுடனும் விளங்கினுர். அவரது தேகத்தின் நிறம் சிவப்பாகும். அவர் அகன்று ஆழ்ந்த கண்களையும், பரந்த மார்பினையும் உடையவராயிருந்தார். அவருடைய வலத்தோள் நடுவில் நான்கு விரற்கிடைச் சதுரமுள்ள மச்சம் ஒன்று இருந்ததாம். அந்த மச்சமே அவருடைய செல்வாக்கு அனைத்திற்கும் மூல காரணமாயிருந்து வந்ததென்று மக்கள் நம்பி இருந்தார்கள். தேகத்தின் சிற்சில பாகங்களில் மச்சம் அமைந்திருப்பது யோகத்திற்குரிய ஓர் அறிகுறியாகுமென்று சோதிட நூல் வல்லார் கூறுகின்றனர் அல்லவா ?

பச்சையப்ப முதலியார் எதையும் வெளிப்படையாக எடுத்துக் கூறும் நல்ல குணத்தைக் கொண்டிருந்தார். அவரை அன்பும் அருளும் நிரம்பியவரென்றே இயம்புதல் பொருந்தும். கொடையில் அவரை வள்ளல் எனலாம்.

மக்களுடைய உடைகள், அவ்வக்காலங்களுக்கு ஏற்ப மாறிக்கொண்டே செல்லும் தன்மையை உடையனவாயுள்ளன. கடந்த ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்குமுன் வழக்கத்தில் இருந்த உடையினையும், இப்போது நடைமுறையில் இருக்கும் உடை-

யினையும் நாம் உற்றுநோக்குவோமாயின், அவற்றிற் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காணலாம். ஆதலின், பச்சையப்ப முதலியார் காலத்தில் இருந்த உடைக்கும் இப்போது இருக்கும் உடைக்கும் வேறுபாடு இருத்தலைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவது பொருத்தமன்று. அரசன் செல்கிற வழியில் குடிகளும் செல்வார்களன்றோ? அதற்கிணங்க, இந்து அரசர்களுடைய காலத்தில் மக்கள் உடுத்துக் கொண்டிருந்த உடைகள் முகம்மதிய அரசர்கள் காலத்தில் இல்லை. பச்சையப்ப முதலியார் முகம்மதிய ஆட்சிக்கும், ஆங்கிலேயருடைய ஆட்சி ஏற்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தார். ஆகவே, அக்காலத்தில் மக்கள் பெரும்பாலும் முகம்மதிய ஆட்சியின் போது இருந்த உடைகளையே உடுத்துக்கொண்டிருந்தார்கள். பச்சையப்ப முதலியாரவர்களுடைய உடையும் முகம்மதியர் காலத்தில் இருந்த உடையினைப் போன்றதே ஆகும். அக்காலத்தில் இருந்த பெரிய மனிதர் என்று சொல்லப்பட்டோர் அனைவரும் பச்சையப்ப முதலியாரின் உடையைப் போன்ற உடையையே உடுத்தியிருந்தனர்.

பச்சையப்ப முதலியார் பாகை அங்கிமுதலானவைகளைத் தரித்துக்கொண்டிருந்தார் என்பது அவர் படத்தைப்பார்த்தால் நன்கு தெரியவரும். அவர் தம் காதில் பெரிய கடுக்கனும், பச்சைக்கல் முருகும் அணிந்திருந்தார்; கழுத்தில் இரத்தினமாலையும், கையில் தோடாவும், விரலில் மோதிரமும் அணிந்திருந்தார். அவர் இடையில் சரிகை நடுக்கட்டுக் கட்டிக் கையில் சிவப்பு கைகுட்டை பிடித்து, உடம்பில் சால்வை போர்த்துப்

பல்லக்கில் இவர்ந்து செல்லுவார். அக்காலத்தில் இருந்த பெரிய மனிதர் எல்லோரும் நாம் மேற்கூறிய விதமாகவே தம்மை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொண்டு பல்லக்கில் ஏறிச் செல்வது இயல்பாயிருந்தது.

பச்சையப்ப முதலியாருக்கு இசையில் நல்ல பழக்கம் ஏற்பட்டிருந்தது. அவர் நன்ருய்ப் பாடும் திறமையைப் பெற்று விளங்கினர். தேவார திருவாசகங்களை அவர் அடிக்கடி அன்புகனியப் பாடிக்கொண்டிருப்பதுண்டு. நம் தமிழ் நாடானது பண்டைக்காலம் தொட்டே இசையில் சிறப்புற்று விளங்குகின்றது. இசையினல் ஐயறிவையுடைய மாக்களே ஒருவித இன்பத்தை அடைகின்றன என்ருல், ஆருவது அறிவாகிய பகுத்தறிவினைப் பெற்றுள்ள மக்களுக்கு இசை இன்பந்தரும் என்பதைப்பற்றி நாம் எடுத்துரைக்கவும் வேண்டுமோ !

சிறப்பாக நம் தமிழ்நாடு இசையில் ஆதிகாலந் தொட்டே புகழ்பெற்றுள்ளது. காவேரி நதியினல் வளம் பெற்று விளங்கும் தஞ்சை மாவட்டம் இசையில் சிறப்புற்றே இருந்து வருகின்றது. தஞ்சை மாவட்டத்தில் அநேகம் இசைப்புலவர்கள் தோன்றி இருக்கின்ருர்கள்.

உலகத்திலுள்ள அனைவருமே இசையைப்பாராட்டுகின்றனர். இசையை விரும்பாதவர் ஒரு சிலரேயாவர். ஆங்கில நாட்டு மேதாவியர்களில் அநேகர் இசையின் சிறப்பை வெகுவாக எடுத்துரைத்து இருக்கின்றனர். உலகம் புகழும் ஷேக்ஸ்பியர் என்னும் மகா கவிஞர், "இசை ஞானம் இல்லாதவனும், இசையைக் கேட்கும்

கால் இன்புறுதவனும், அரசனுக்கு துரோகம் செய்வதற்கும், சதியாலோசனை செய்வதற்கும், கொள்ளையாதி குற்றங்களைச் செய்வதற்கும் அஞ்ச மாட்டான்" என மொழிகின்றார்.

## 8. தென்னிந்திய செய்தி

பச்சையப்ப முதலியார் காலத்திற்கு முன்னும் அவர் காலத்திலும் தென்னிந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது என்பதைச் சற்றே கவனிப்போம். எலிஸபெத்து இராணியாரிடமிருந்து சாசனம் பெற்றுக்கொண்டு இந்தியாவுக்கு வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் இங்குப்பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டு வாணிகம் செய்து வந்தார்கள். தென்னிந்தியாவிலும் அவர்களுக்கு அநேக தொழிலிடங்கள் இருந்தன. அவைகளில் முக்கியமான இடங்கள் சென்னையும் மசூலிப்பட்டணமுமாகும். முதலில் வணிகத் துறையில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர்கள், சிறிது காலம் கழிந்த பின்னர் ஊர்களைக் கைப்பற்றி அவைகளை ஆளவும் தொடங்கினர்கள். அக்காலத்தில் தென்னிந்தியாவில் ஆறுகாட்டு நவாபு, நிஜாம் அரசர், ஐதர் சாயபு, மராட்டியர்கள் ஆகிய இவர்கள் செல்வாக்கு உள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்களுக்கிடையில் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் இருந்து வந்தனர். ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆதிமுதற்கொண்டே தீராத பகை ஏற்பட்டிருந்தது. ஆறுகாட்டு நவாபு, நிஜாம் அரசர், ஐதர் சாயபு, மகா ராஷ்டிரர் ஆகிய இவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு வந்தார்கள். இவர்கள் இவ்வாறு சண்டை

பிட்டுக்கொண்டு இருக்கவே, நாட்டில் அமைதி இன்மையே குடிகொண்டிருந்தது.

ஆங்கிலேயர்கள் தங்களுடைய நிலையை நினைத்து ஆறுகாட்டு நவாபுடன் நட்புற்றிருந்தார்கள். நாம் மேலே கூறிய ஆறுகாட்டு நவாபு, நிஜாம் அரசர் ஆகிய இவர்கள் சிற்சில காலங்களில் ஒற்றுமைப் பட்டும், சிற்சில காலங்களில் தங்களுக்குள் வேறுபட்டும் காலத்திற்கேற்றபடி காரியங்களைச் செய்து வந்தார்கள். இவர்கள் வேறுபட்டிருந்த காலங்களில் தங்கள் எதிரிகளின் நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அதிக சேதத்தையும் கொடுமைகளையும் விளைத்து வந்தார்கள். எனினும், ஐதர் சாயபு மக்களுக்குச் செய்து வந்த கொடுமை சொல்லத் தரமன்று. ஐதர் தம்முடைய நாட்டை மாத்திரம் செவ்வையாய் ஆண்டு வந்தார்; ஆனால், தாம் படையெடுத்துச் சென்ற ஊர்களையும், அங்கிருந்த மக்களையும் பாழ்படுத்தினர் என்பது நாட்டு வரலாற்றைப் படிப்போருக்கு விளங்கும். ஐதர் சென்னையைச் சேர்ந்த ஊர்களின் மீதும் படையெடுத்துச் சொல்லொணுக் கொடுமைகளைச் செய்தார். ஐதர் என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே மக்கள் கலக்கம் கொள்ளுவார்கள். மக்கள் இப்போதுங்கூட ஐதர் கலாபனையைப் பற்றிய அநேகங் கதைகளை எடுத்துக் கூறுகின்றூர்கள். ஐதருடைய படையெடுப்புக்குப் பயந்து பலர் தங்களுக்கு உரிமையுள்ள பணத்தையும் நகைகளையும் பூமிக்குள் புதைத்து வைக்கலானுர்கள். அதனுலேதான் இப்போதும் சென்னையைச் சேர்ந்த சிற்சில இடங்களில் கட்டடம் கட்டக் கடைக்கால் எழுப்பப் பூமியைத்

தோண்டும் போது குடங்களிலும் தோண்டிகளிலும் இருந்து அணிகலன்கள் முதலியன அகப்படுகின்றன.

ஐதர் பெரியதொரு படையை வைத்துக்கொண்டிருந்தார். அவருடைய படை வீரர்களைச் சென்னைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 'குதிரைக்காரன் தண்டு,' என்று சொல்லி வந்தார்கள். படையினர் ஊர்களில் புகுந்து பொருள்களைக் கொள்ளை அடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார்கள் என்பதற்கு அநேகம் ஆதாரங்கள் இருக்கின்றன. மக்களுக்குப் பலவிதமான கொடுமைகளை ஐதரின் படை வீரர்கள் நிகழ்த்தி வந்தார்கள்.

நாம் மேலே கூறியபடி தென்னிந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்தவர்கள் தங்களுக்குள் அடிக்கடி முரண்பட்டுக் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு இடையில் இருந்த பல பணியாளர்கள் ஏராளமான பொருள்களைத் திரட்டினார்கள். இன்னும் அக்காலத்தில் அரசாங்க விவகாரங்களில் ஈடுபட்டிருந்த துவிபாஷிகள் என்பவர்களும் கணக்கு வழக்கற்ற பொருளைச் சேர்க்கத் தகுந்த வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

நம் பச்சையப்ப முதலியார் பணம் சேர்ப்பதையே பெரிதாக மதியாது, அறஞ் செய்தலையும் தம் சிறு வயது முதற்கொண்டே பெரிதாக மதித்து வந்தார். ஆகவே, அவர் பெயரானது மற்றவர்களுடைய பெயரைப்போல அழிந்துவிடாமல் குன்றின் மேலிட்ட விளக்கைப்போல இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது-சென்னையின் நடுவில் பச்சையப்ப முதலியாரின் பெயர்

ரால் கட்டப் பெற்றிருக்கும் கலாசாலை மண்டபத்தில் **பச்சையப்பன்** என்னும் பெயர் பச்சை எழுத்துக்களில் அழகுபெறத் தீட்டப்பெற்று இருக்கின்றது. இவ்வுலகம் உள்ளளவும் பச்சையப்பரின் பெயரானது நிலவிவரும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

பச்சையப்ப முதலியார் துவிபாஷி வேலையைச் செய்துகொண்டு வருகையிலே தமக்குத் துணையாகத் தருமராய முதலியார் என்பவரையும் புங்கத்தூர்ச் செங்கல்வராய முதலியார் என்பவரையும் சேர்த்துக் கொண்டு, கிழக்கிந்திய கம்பெனி'' ஜாகிராகிய பூவிருந்த வல்லி, திருப்பாச்சூர் முதலிய இடங்களிலிருந்து வர வேண்டிய மேல் வார நெல் குத்தகை உரிமையைக் கம்பெனியாரிடமிருந்து, 'ரொக்கத்திற்கு'த் தாம் எடுத்துக் கொண்டு, அத்தொழிலை நடத்தி, அதனாலும் அதிகமான இலாபத்தை ஆண்டுதோறும் அடைந்து வந்தார். இன்னும் முதலியாரவர்கள் இவ்வாறான தொழில் பலவற்றில் ஈடுபட்டு அதிகமான பொருளைத் திரட்டி வருவாராயினர்.

அப்போது ஆறுகாட்டு நவாபான வாலாஜா என்பவருக்கும், சென்னை நகரைச் சார்ந்த இடங்களில் தொழில் செய்து கொண்டிருந்த ஆங்கிலேயருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. அதைத் தீர்த்துத் தமக்கு இலாபகரமானதொரு முடிவு ஏற்படுவதற்காக நவாபு வாலாஜா, ஜோசப் சலிவன் என்னும் பெயரினைக் கொண்ட ஓர் அதிகாரியை வங்காளத்திலிருந்த ஆங்கிலேய கவர்னர் ஜெனரலிடம் தூதாக அனுப்பினார். நவாபு வாலாஜா என்பவர் தஞ்சாவூர் மாவட்டம்

தமக்குக் கிடைக்க வேண்டுமென்றும், தம்முடைய காரியங்களில் ஆங்கிலேயர்கள் தலையிடக் கூடாதென் றும், ஐதரைத் தோற்கடித்து அவருடைய நாட்டை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டால் அதில் ஒரு பாகத்தைத் தமக்குக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இவ் விண்ணப்பங்களைச் சலிவன் துரையவர்கள் வங்காளத்தில் இருந்த கவர்னர் ஜெனர லுக்குத் தெவித்து, நவாபு விருப்பத்தை நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவ ருடைய விண்ணப்பங்களை ஏற்ற கவர்னர் ஜெனரல் நவாபுக்கு அனுகூலமாகச் சில நன்மைகளைச் செய்தார். அதை அறிந்து சலிவன் துரை மகிழ்ந்தார். வங்காளக் கவர்னர் ஜெனரல் சலிவன் துரை அவர்களையே ஆங்கிலேயர்களின் பிரதிநிதியாக நவாபு நாட்டில் நிய மித்து, அவர் மூலமாக நவாபின் வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்தனுப்பினர். இதைக்கண்டு நவாபு வாலாஜா மகிழ்ச்சி அடைந்தார். பச்சையப்ப முதலி யார், இத்தகைய செல்வாக்கைக் கொண்ட சலிவன் துரையவர்களிடத்தில் துவிபாஷியராக அமர்ந்து உண் மையுடன் நடந்து வந்தார். அதனுல், சலிவன் துரைக் குப் பச்சையப்ப முதலியாரிடத்தில் அளவு கடந்த மதிப்பு இருந்தது. அந்த மதிப்பைப் போக்கிக்கொள் ளாமல் பச்சையப்ப முதலியார் மேன்மேலும் அதை வளர்த்து வந்தார்.

பச்சையப்ப முதலியார் தம்முடைய வருவாய்க்கு இடையில் அறத்தை மறவாது செய்து கொண்டு வந் தார். அதனுல், அவருக்குப் பெயரும் புகழும் பெருகிக்

கொண்டே வந்தன. அவரைத் தென்னாட்டில் இருந்த அனைவரும் கொண்டாடத் தலைப்பட்டனர்.

## 9. தஞ்சை நகர் வாழ்க்கை

பச்சையப்ப முதலியாரவர்கள் சலிவன் துரை அவர்களுக்குத் துணைவராயிருந்து, பிறர் மெச்சத்தக்க வண்ணம் தம் தொழில்களைச் செய்து வந்தார். அவருக்கு இயற்கையிலேயே அறிவு நிறைந்திருந்தது. அவர் பௌனி நாராயணப்பிள்ளையவர்களிடம் சேர்ந்திருந்த போதே தொழிலில் அவருக்கு அதிகத் திறமை ஏற்பட்டிருந்தது. அவரிடம் அரசியல் தந்திரமும் குடிகொண்டு இருந்தது. அவருக்குப் பிறரை ஏமாற்றிப் பொருள் தேடிச் செல்வச் சீமானாக வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லை. நியாய வழியில் கிடைக்கும் பொருளே சாலச் சிறந்தது என்ற சீரிய நோக்கத்தை அவர் கொண்டிருந்தார். அதற்கேற்ப, அவர், தம் பொருளை எல்லாம் நியாய வழியிலேயே தேடினார். அவர் பிறருடைய சொத்துக்குச்சிறிதும் ஆசைப்படாதவர். அவருடைய நற்குணங்களுக்காக அநேகர் அவரை விரும்பி, அவருடன் வாணிகம் நடத்தினர்; அதனால், அவருக்கு ஏராளமான வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. பொருள் வருவாயைக் கண்டு பச்சையப்ப முதலியார் இறுமாப்புக் கொள்ளவில்லை. பொருள் வருவாய் விருத்தியடையும் போது பச்சையப்பரின் நற்குணங்களும் விருத்தியடைந்தன. அற்பர்கள் தங்களுக்குப் பொருள் வருவாய் அதிகப்படுதலைக் கண்டு இறுமாப்பு அடைவார்கள். பச்சையப்பர் எவ்வளவு பொருள் வந்த போதிலும், ஆடம்பரம் இல்லாத எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, தம்

முடைய பொருளை அறவழிகளில் செலவழித்து, அதனால் பெரும் புகழும் அடைந்தார்,

பச்சையப்ப முதலியார் இருந்த காலமோ, நாட்டில் அமைதி இல்லாதிருந்த காலமாகும். அவர் காலத்தில் எந்த அரசும் ஒழுங்காக நிலை பெற்றிருக்கவில்லை; நியாயத்தைக் கவனிப்பவர் இல்லை. ஆள் பலமே முதன்மையாகக் கருதப்பட்டு வந்தது. அப்போது ஆங்கிலேயர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை இங்குச் சரியாக நிலை நிறுத்தவில்லை. மக்களைப் பலவித கொடுமைகளுக்கு உட்படுத்தி வந்த கொள்ளைக் கூட்டத்தினர் அழிந்ததும் அழியாததுமாயிருந்தனர். அநேக இடங்களில் பாளையக்காரர்களும் குறுநில மன்னர்களும் அரசாட்சி செய்து வந்தார்கள். அவர்களில் அநேகர் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு, மக்கள் நலத்தைப் பேணுதுமிருந்தனர். பச்சையப்ப முதலியாரவர்கள் தென்னிந்தியாவில் பெரும் புகழ் அடைந்திருந்தாராகையால், நாம் மேலே கூறியவர்கள் தங்களுக்குள் வேற்றுமை உண்டாகும்போது பச்சையப்ப முதலியாருடைய உதவியை நாடுவது வழக்கம். எனவே, பச்சையப்ப முதலியாருக்குச் சில குறுநில மன்னர்களும், பல பாளையக்காரர்களும் நண்பர்களாய் இருந்தார்கள். அவர்களுக்குப் பணமுடை முதலானவை ஏற்பட்ட காலத்தும் முதலியார் அவர்கள் பணம் முதலானவைகளைக் குறைந்த வட்டிக்குக் கொடுத்து உதவி செய்வது வழக்கம். இதனாலும் முதலியாருக்கு ஏராளமாகப் பொருள் கிடைத்தது.

அப்போது தஞ்சாவூரை இந்திய அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் ஆங்கிலேயருக்கு ஆண்டு

தோறும் இவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தின் படி தஞ்சாவூர் அரசர் ஆங்கிலேயருக்கு ஆண்டுதோறும் பணம் கொடுக்கவேண்டியவராய் இருந்தார். அவர் அத்தொகைகளை ஒரே விதமான நாணயங்களின் மூலம் கொடுக்காமல் பலவிதமான நாணயங்களின் மூலம் கொடுத்து வந்தார். அதனால், ஆங்கிலேயக் கம்பெனி யாருக்குச் சில இடையூறுகள் ஏற்பட்டன. ஆகவே, பச்சையப்ப முதலியார் அவைகளை நூற்றுக்குப் பத்து, இருபது வீதம் வட்டந் தள்ளி வாங்கிக்கொண்டு ஆங்கிலேயர்களுக்கு அத்தொகைக்குச் சரியாகப் பூவராகன்களாகவே கொடுத்துவந்தார். தஞ்சாவூர் அரசருக்கு மாத்திரமேயன்றிக் கப்பம் கட்டும் மற்றவர்களுக்கும் முதலியாரவர்கள் இவ்விதமாக உதவிசெய்து ஏராளமான பொருளைச் சம்பாதித்தார். அக்காலத்தில் வட்டத்துக்குப் பணம் கொடுப்பது ஒரு பெரிய தொழிலாக நடந்து வந்தது. முதலியார் செல்வச் சீமானாய் இருந்தபடியால் இத்தொழிலை மேற்கொண்டு, ஏராளமான ஊதியத்தை அடைந்தார்.

இவ்வாறாகப் பச்சையப்ப முதலியார் பெரும் பொருளைத் திரட்டிக்கொண்டு தஞ்சாவூரில் தமக்கெனப் பெரியதோர் மாளிகையைக் கட்டிக்கொண்டு, அதில் சிறப்பாக வாழ்ந்து வரலானார். அவர் தமக்குப் பல வகையிலும் உதவி செய்து தம்மை முன்னுக்குக் கொண்டு வந்த பௌனி நாராயணப் பிள்ளை அவர்களிடத்திலேயே தமக்குக் கிடைத்த பொருளை எல்லாம் சேர்த்து வந்தார். பிள்ளையவர்கள் பச்சையப்ப முதலியாருடைய அறிவு நுட்பத்தையும், வாணிகத் திறமை

யையும், அவர் அரசியல் விவகாரங்களில் நடந்து கொள்ளும் பான்மையையும் கண்டு, தம் பெயராலும் தொழில் செய்வதற்குப் பச்சையப்பருக்கு உத்தரவு கொடுத்தார். ஆகவே, முதலியாரவர்கள் தம் பெயராலும், பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள் பெயராலும் நாம் மேலே கூறிய தொழில்களை நடத்தி ஏராளமான ஊதியத்தை அடைந்தார். முதலியாரவர்கள் இவ்வாறாக இருக்கையிலும் தமது பிறவிக்குணமாகிய அறஞ் செய்தலை மறவாமல் செய்துகொண்டே வந்தார்.

பச்சையப்ப முதலியார் அவர்கள் பொறாமை வஞ்சனை முதலான இழிகுணங்களை ஓர் அணுவேனும் உடையவரல்லர். அவர் எதையும் வெளிப்படையாக எடுத்துரைக்கும் குணத்தையே கொண்டிருந்தார். அவர் மறந்தேனும் ஒருவருக்கும் கெடுதி செய்ய மாட்டார். எப்பொழுதும் அவர் ஓரம் பேசியதே இல்லை. அவர் சிற்சில காலங்களில் சினம் கொள்ளுவார். என்றாலும், அச்சினம் விரைவில் நீங்கி விடுவது வழக்கம். அவர் மனத்தில் எப்போதும் மகிழ்ச்சியே குடிகொண்டிருக்கும். கடுமையான சொல் அவர் வாயிலிருந்து வராது. 'இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே,' என்பதனை அவர் உணர்ந்திருந்தார்.

முதலியார் அவர்கள் இயற்கையிலேயே அறங்கிடந்த நெஞ்சுள்ளவர் என்றேமல்லவா? முதலியாருடைய உதவியை நாடி அநேக மக்கள் அவர் வீட்டுக்கு அடிக்கடி வருவது வழக்கம். அவர்களை முதலியாரவர்கள் மலர்ந்த முகத்துடனும், இனிய வார்த்தைகளுட

னும் வரவேற்று அவர்களுடைய குறைகளை ஆதியோ டந்தமாகக் கேட்பார். அவர்களுடைய குறைகள் முறை யானவைகளாய் இருந்தால், அக்குறைகளை நீக்கி அவர் களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்க அவர் ஒரு சிறிதும் பின்வாங்கவே மாட்டார். அவர்களுடைய குறைகள் ஒழுங்கற்றவைகளா யிருந்தால், அவர்களை இன்சொல் லுடன் அனுப்பிவிடுவார். யாருடைய மனத்தையும் அவர் எக்காரணத்தைக் கொண்டும் நோகச் செய்யமாட் டார். ஆகவே, அவருக்கு விரோதிகளே இல்லை. பொறாமை காரணமாக யாரேனும் அவரிடம் விரோதம் பாராட்டினால், அவர்களுக்கும் முதலியாரவர்கள் தீமை செய்யாமல் தம்மாலான நன்மைகளையே செய்து வரு வார். என்னே அவருடைய பெருந்தன்மை! இத்த கைய குணங்களையல்லவோ மனிதர்களாகப் பிறந்தவர் கள் கொண்டிருக்க வேண்டும்! இத்தகைய குணங்களைக் கொண்டவர்களாலேதான் உலகம் சிறக்கும்.

முதலியார் அவர்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு நலன்களைக் கொடுக்க வல்லதாகிய கல்வியின் முக்கியத்தை உணர்ந்து இருந்தார்; சமய வழிபாடு மனிதனுடைய உயிரைச் செம்மைப் படுத்து மென்பது முதலியார் கருத்து. ஆகவே, அவர் பெருத்த செல்வச் சீமானாகத் தம்முடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த காலத்தும், தம் காலத்தின் ஒரு பகுதியைக் கல்வித் துறையிலும், சமய ஆராய்ச்சியிலும் செலவழித்து வந்தார்.

நாம், முன்னே ஓரிடத்தில் முதலியாரவர்கள் இசை யில் பிரியங் கொண்டவர் என்று சொன்னோமல்லவா?

அதற்கேற்ப, அவர் தமக்கு ஓய்வு கிடைத்த நேரங்களில் பாடிக்கொண்டிருப்பார்.

முதலியாரவர்கள் ஒரு விதத்தில் சீர்திருத்தக்காரராயும் இருந்தார் என்று தெரிகிறது. அவருக்கு நம் குடும்பங்களில் இருக்கும் சில கெட்ட வழக்கங்கள் பிடிக்கவில்லை. அந்தக் கெட்ட வழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று அவர் பெரிதும் அவாவியிருந்தார். அநேகர் கலியாண காலங்களிலும், வேறு சில நல்ல காலங்களிலும் தாசி கச்சேரி வைப்பதனல் தம் வீடுகளுக்கு வரும் மக்களை மகிழ்விப்பதாகக் கருதுகின்றனர் அல்லவா? அத்தகைய தாசி கச்சேரிகளால் மக்களிடத்தில் ஒழுக்கக் குறைவு ஏற்படக்கூடும் என்று முதலியார் கருதினர். தாசிகள் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கத்தையும் அவர் வெறுத்தார். நம் குடும்பங்களில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் பெண் மக்கள் ஒன்றுகூடி இடும் பேரிரைச்சல்களையும் அவர் மிகவும் கண்டித்தார். "இறந்தவர்கள் வரப்போகிறதில்லை" என்றும், ஆகவே, "இனிமேல் சாகப்போகும் பிணங்கள் செத்த பிணத்தருகே கூடிக்கொண்டு கத்துவதனல் வரக்கூடிய நன்மை ஒன்றுமில்லை" என்றும் அவர் அடிக்கடி கூறி வந்தார்.

முதலியார் அவர்கள் தம் தமக்கையாரின் குமாரத்தியாகிய அய்யாளம்மாளை மணந்து இருந்தாரல்லவா? அவருக்கு நெடுநாள் வரையில் பிள்ளைப்பேறு இல்லை. ஆகவே, முதலியார் அவர்கள் பிள்ளை பிறக்கவில்லையே என்று மிகவும் வருந்திக்கொண்டிருந்தார். ஆகவே, சோழ நாட்டைச் சேர்ந்த திருமறைக்காடு என்னும் பெய

ரைக்கொண்ட வேதாரண்யம் என்னும் ஊரிலிருந்த ஒரு வேளாளருடைய பெண்ணை இரண்டாந்தாரமாக விவாகம் செய்து கொண்டார். அந்தப் பெண்ணின் பெயர் பழனி ஆயி என்பதாகும்.

## 10. மறுமணமும் மனக்கவலையும்

முதலியாரவர்கள் உலகாநுபவம் நன்குய்த் தெரிந்தவராயிருந்தும், பிள்ளைப்பேறு ஒன்றையே முதன்மையாகக் கொண்டு இரண்டாம் முறை ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டாரே அல்லாமல், வேறெக் காரணங் கருதியும் அவர் இரண்டாந்தரம் கலியாணம் செய்து கொள்ளவில்லை. இரண்டு மனைவியர்களை ஒருவர் கலியாணஞ் செய்துகொள்வதனுல் ஏற்படக்கூடிய துன்பங்களையும், மன அமைதி இன்மையையும் அவர் மிகவும் உணர்ந்திருந்தார். அதற்கேற்ப அவருடைய இரண்டு மனைவியர்களும் தங்களுக்குள் ஒருமைப்பாடு சிறிதுமின்றிச் சண்டை இட்டுக்கொண்டே வந்தார்கள். அதனுல், முதலியார் அவர்களுக்கு மன வருத்தம் ஏற்பட்டதெனினும், தமது திறமையினுல் அப்பிணக்குகளைத் தீர்த்து வைத்து, ஒருவாறு அவர்கள் மறுபடியும் சண்டை இடாதபடி பார்த்து வந்தார்.

முதலியாரவர்கள் ஒரு மைந்தனை அடையப் பழனியாயி அம்மாள் என்பவரை மணந்துகொண்ட போதிலும், அந்த அம்மையார் அவரிடத்தில் அன்புடன்நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. அதனுல் முதலியார் தம் முதல் மனைவியாரிடத்தில் பிரியமாயிருந்து வந்தார். அவர் தம் இரண்டாம் மனைவியாருக்குச் சிறந்த நகைகளுடன் பத்தாயிரம் வராகன் கொடுப்பதாக வாக்களித்

திருந்தார். பிறகு, அவ்வம்மையாரின் போக்குப் பிடிக்காமையினுல் முதலியார் நகைகளை மாத்திரம் போட்டு விட்டுத் தாம் வாக்களித்தபடி பத்தாயிரம் வராகன்களைக் கொடுக்கவில்லை. தம் மரண சாசனத்திலும் அவர் தம் சொத்துக்களைத் தம் முதல் மனைவியாரும் தம் தமக்கையாரும் அடைய வேண்டுமென்று எழுதி யிருக்கிருரே அன்றித் தம் இரண்டாம் மனைவியாருக்குச் சொத்தில் யாதொரு தொடர்பும் வைக்கவில்லை.

பச்சையப்ப முதலியாருக்கு இரண்டாம் மனைவியாரிடம் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெயர் சின்னயி அம்மாள் என்பதாகும். அதற்குக் கலியாணச் செலவுக்கென ஐயாயிரம் பொன் கொடுக்கும்படியாக முதலியார் தம் மரண சாசனத்தில் எழுதினர். ஆனல், அந்தச் சின்னயி என்னும் குழந்தை இள வயதிலேயே இறந்துவிட்டது. தம் மரண சாசனத்தில் முதலியாரவர்கள் தம் இரண்டாம் மனைவியாரைப் பெயரிட்டுக் குறிப்பிடாமல் 'வேதாரணியத்துப் பெண்', என்றே குறிப்பிடுகிருர். இதனுலும் முதலியாரவர்கள் தம் இரண்டாம் மனைவியாரை விரும்பவில்லை என்று விளங்குகிறது.

முதலியாரவர்கள் தமக்கு அந்திய காலம் நெருங்கும்போது இயற்கை வளங்களுக்குப் பேர்போனதும் பாடல் பெற்றதுமான திருவையாறு என்னும் பதியில் தங்கி இருந்தார். அப்போது அவருடைய இரண்டாம் மனைவியார் திருவையாற்றில் அவர் தங்கி இருந்த வீட்டின் எதிர் வீட்டில் தங்கி இருந்தார் எனத் தெரிகிறது. இதனுலும், முதலியாரவர்களுக்கும் அவருடைய இரண்

டாம் மனைவியாருக்கும் அவ்வளவாக ஒற்றுமை ஏற்பட்டிருக்கவில்லை என்று தோன்றுகிறது.

பச்சையப்ப முதலியாரின் முதல் மனைவியார், முதலியாரின் இரண்டாவது மனைவியாரான பழனிஆயி அம்மாளை நன்றாகப் பாராட்டவில்லையென்றே தெரிகிறது. அந்த அம்மையார் பௌனி நாராயணப் பிள்ளைக்கு எழுதிய ஒரு கடிதத்தில், 'சோழியச் சிறுக்கி,' என்றும், 'சோழியப் பெண்,' என்றும் எழுதியிருக்கிறார். இதனாலும் முதலியாரின் மனைவிமார் இருவருக்கும் இருந்த நட்புரிமை எத்தகையதென்பது தெள்ளிதில் விளங்கும். அவர்கள் எவ்வாறு மனம் ஒருமைப்பட்டு இருப்பார்கள்? அவர்களால் முதலியார் மிகவும் துன்பப்பட்டார். இரண்டு மனைவியர்களை மணந்து கொள்வது எவருக்கும் துன்பத்தையே தரும்.

முதலியார் அவர்களுக்குச் சிறந்த நண்பராய் இருந்தவர் குழந்தை வீரப் பெருமாள் பிள்ளை என்பவராவர். அவர் அக்காலத்தில் சென்னையில் இருந்த பிரபல ஆங்கிலேயர்களுக்குத் துவிபாஷியாராயிருந்து அதிக பொருளும் கீர்த்தியும் தேடிக் கொண்டவராவர். அவருக்குச் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த ஹரிக்கோடி என்னும் ஊர் சுரோத்திரியமாகக் கிடைத்திருந்தது. அவரும் பச்சையப்ப முதலியாரைப் போலவே நல்ல குணத்தைக் கொண்டவராயிருந்தபடியால், அவர் அநேகம் சத்திரங்களைக் கட்டினார். அவர் தம்முடைய சுரோத்திரியக் கிராமத்திலிருந்து கிடைத்த வரும்படியைக் கொண்டே அறங்கள் பல செய்து வந்தார். அவர் சென்னையைச் சேர்ந்த சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு

பெரிய மெத்தை வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். முதலியாரவர்கள் பிள்ளையவர்களுக்கு உயிர் நண்பராய் இருந்தாராகையால், தாமும் அவர் இருப்பிடத்திற்கருகில் இருக்க வேண்டுமென்று பிள்ளையவர்கள் வீட்டிற்கு எதிரில் ஒரு வீடு கட்டிக் கொண்டு, அதில் வாழ்ந்திருந்து, வேண்டிய போதெல்லாம் தஞ்சாவூருக்குப் போய்த் தம்முடைய தொழில்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். இவ்வாறுகப் பச்சையப்ப முதலியார் அவர்களும் குழந்தை வீரப் பெருமாள் பிள்ளையவர்களும் எதிர் எதிராக உள்ள வீடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

முதலியாரவர்களுக்கு இப்போதுதான் அளவு கடந்த வருவாய் வந்து கொண்டிருந்தது. முதலியாரவர்கள் செல்வத்தில் திளைத்தவராய் மகா உயர்ந்த நிலையிலிருந்த காலம் இதுவேயாகும். முதலியார் அவர்கள் இயற்கையிலேயே அறம் வளர்மனம் வாய்ந்தவர் என்றுமல்லவா? அதற்கேற்ப, அவர் தமக்கு ஏராளமான வருவாய்வந்த இக்காலத்தில் கணக்கற்ற அறங்களைச் செய்துவந்தார்; காசி முதல் இராமேசுவரம் வரையில் உள்ள கோயில்களில் பல நிரந்தரமான கைங்கரியங்கள் நடக்கும்படி பொருள் கொடுத்தார். சைவ சமய தீட்சை பெற்றுக்கொண்டு தம் காலத்தை முதலியார் தெய்வ வழிபாட்டில் கழித்து வந்தார்; அடியார்களின் பசிப் பிணியைச் சாதி மதம் இனம் முதலான வேறுபாடுகளைப் பாராட்டாமல் நீக்கி வந்தார். அவர் அடியார்களுடன் இருந்து தாமும் அவர்கள் உண்ணும் ஆகாராதிகளையே உண்டு களித்தார். பின்னும் முதலியார் தம்மாலான உதவிகளை எல்லாம் ஏழை எளியவர்களுக்கும் அடியார்

களுக்கும் செய்து வந்தார். முதலியாரவர்கள் தேவார திருவாசகங்களை வீணையில் அமைத்துப் பாடி மகிழ்வார். அவர் தினந்தோறும் பூசை செய்வதை விடுவதில்லை. பூசை காலத்தில் அவர் சைவசமயாச்சாரியர்கள் பாடிய தேவார திருவாசகங்களையும், இன்னுமிவை போன்ற பிறவற்றையும் பாடுவார். அவருக்கு மதவேற்றுமை இல்லை. அடியார்கள் எம்மதத்தவர்களாயினும் சரியே! அவர்களை அவர் உபசரிக்கப் பின்வாங்கமாட்டார். "என் கடவுள் பெரிது; உன் கடவுள் சிறிது;" என்ற சண்டையை அவர் அறவே வெறுத்தவராவர். இறைவர் அவரவர்களுடைய பரிபக்குவ நிலைக்குத் தக்கபடி தோன்றுகிறார் என்பதை முதலியார் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலால், அவர் எவ்வித மத பேதமும் பாராட்டாமல், எல்லோருக்கும் உதவி செய்து வாழ்ந்திருந்தார்.

## 11. முதலியாரின் இறுதிக் காலம்

முன் அத்தியாயத்தில் முதலியார் அவர்கள் சென்னையிலும் தஞ்சாவூரிலுமாக வாழ்ந்துவந்தார் என்று கூறினேமல்லவா? அதுகாலைத் தஞ்சை மண்டலம் ஓர் இந்திய அரசரால் ஆளப்பட்டு வந்தது. அந்த அரசபரம்பரையினர் கல்வி கேள்விகளில் வல்லுநர்களாய் இருந்ததோடு, பல புலவர்களையும் ஆதரித்து வந்தார்கள். முதலியாரவர்கள் தஞ்சை மாநகரில் வாழ்ந்திருந்த காலையில் அமரசிங்கு என்னும் பெயருள்ள அரசர் தஞ்சாவூரை ஆண்டு வந்தார். அவர் சென்னை அரசாங்கத்துக்கு அடங்கியவராயிருந்தார். அவர் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு

வருடந்தோறும் கொடுக்க வேண்டிய தொகையைச் சரிவரக்கொடுக்காமல் காலம் கடத்திக் கொண்டு வந்தார். இதையறிந்த கம்பெனியார் 'இதற்கென் செய்வது' என்று ஆலோசித்துக் கொண்டிருந்தனர். இவ்வாறாக அவர்கள் இதைக்குறித்து ஆலோசித்துக் கொண்டு இருக்கையில் முதலியாரவர்கள் சென்னையில் கோமளேசுவரன் பேட்டையில் தமக்குச் சொந்தமாயிருந்த ஒரு வீட்டில் இருந்து, தம்முடைய வாணிபத்தைக் கவனித்துக்கொண்டு வந்தார். அப்போது சென்னையின் கவர்னராயிருந்தவர், "ஆர்ச்பெல் காமல்" என்னும் பெயரினைக் கொண்ட ஆங்கிலேயராவர். அவர் இதற்கு முன்பாகவே பச்சையப்ப முதலியாரவர்களுடைய குணப்பண்புகளைப் பற்றியும், செல்வச் சிறப்புகளைப்பற்றியும் அறிந்திருந்தார். ஆகையால், அவர் முதலியார் அவர்களை வரவழைத்து, தக்க விதமாக உபசரித்துத் தஞ்சாவூர் அரசர் நெடுநாளாகக் கம்பெனியாருக்குச் சேரவேண்டிய தொகைகளைச் செலுத்தாமல் இருக்கின்றனரென்றும், ஆகவே, முதலியாரவர்கள் தஞ்சாவூரினது நெல் சாகுபடி வருமானங்களைத் தாமே வசூல் செய்து கம்பெனியாருக்குப் பணமாகக் கட்டிவர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கவர்னர் கூறியவைகளைக் கேட்ட பச்சையப்ப முதலியார் அவர்கள், கவர்னர் கூறிய செய்தியில் உள்ள சிக்கலை அறிந்து, அத்தகைய பெரியதொரு காரியத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு அதைச் சரிவர நிறைவேற்றி வைப்பதற்குத் தம்மால் முடியாது என்று சொல்லி, ஒருவாறாக அதில் தலையிடாமல் விலகிக்கொண்டார். எனினும், முதலியார் அவர்

கள் கம்பெனியாரால் இந்தவேலையைக் கவனிக்க நியமிக் கப்பெற்ற ஒரு கனவானுக்கு உதவி புரியவேண்டியவ ரானுர். அதற்காக முதலியார் அவர்கள் தஞ்சையில் இருந்தபோது தஞ்சாவூர் மன்னருக்கு ஓர் இலட்சம் வராகன் கடன் கொடுத்தார். அக்கடனைக் கொண்டு தஞ்சாவூர் மன்னர் கம்பெனியாருக்குக் கொடுக்க வேண் டிய கடனை ஒருவாறு தீர்த்துக்கொண்டார். தஞ்சாவூர் அரசர் கடன்காரராய் இருக்கவே, அவர் பல பணக்காரர் களிடத்தில் கடன் வாங்கவேண்டியவரானுர். அக்கடன் களுக்கு ஈடாக அவர் கடன்காரர்களுக்கு ஊர்களை அடைமானமாக எழுதிவைத்தார். இவ்வாருக, தஞ்சா வூர் மன்னருக்கு அநேகர் கடன் கொடுத்து, அதற்கு ஈடாக அவரிடமிருந்து பல ஊர்களை எழுதி வாங்கிக் கொண்டு, தஞ்சை நாட்டில் பெருத்த ஆரவாரம் செய்து கொண்டு, குடிகளைத் துன்பத்திற்கு உள்ளாக்கி வந் தனர். குடிகள் இத்துன்பங்களைப் பொறுக்க முடியாமல் கிளர்ச்சி செய்தார்கள். இச்செய்தி கம்பெனியாருக்கு எட்டவே, அவர்கள் இதைக்குறித்து விசாரணை செய்து உண்மையைக் கண்டறிய எண்ணித் தஞ்சாவூர் அரச ருக்கு ஏராளமாகக் கடன் கொடுத்திருந்தவர்களை எல் லாம் சென்னைக்கு வரவழைத்தார்கள். பச்சையப்ப முதலியாரும் தஞ்சாவூர் அரசருக்கு ஏராளமான தொகையைக் கடனுகக் கொடுத்திருந்தாராகையால், கம்பெனியார் உத்தரவுக்கு இணங்கி அவரும் சென் னைக்கு வரவேண்டியவரானுர். சென்னைக்கு வருமுன் னர் முதலியாரவர்கள் கிழக்கிந்தியா கம்பெனியைச் சேர்ந்த பெரிய அதிகாரிகளிடம் கடித மூலம் ஆங்கிலேயர் களுடைய தூண்டுதலினுலேயே தஞ்சாவூர் மன்னருக்கு

ஓர் இலட்சம் வராகன் தாம் கடன் கொடுத்ததாகவும் அதில் ஐம்பதினுயிரம் வராகன் தமக்குச் சேர்ந்துவிட்டன என்றும், இன்னும் தமக்குத் தஞ்சாவூர் மன்னரிடமிருந்து ஐம்பதினுயிரம் வராகன்கள் சேரவேண்டுமென்றும், ஆகவே தாம் தஞ்சாவூரிலேயே இருக்க வேண்டுவது கட்டாயமாகிறதென்றும், தஞ்சாவூர் அரசருக்குக் கடன் கொடுத்திருக்கின்ற மற்றவர்களைப்போலத் தாம் குடிகளை வருத்துவதில்லை என்றும், இதைக் குறித்துக் குடிகளே சாட்சி சொல்லுவார்களென்றும், ஆகவே தம்மைத் தஞ்சாவூரை விட்டு வரவேண்டுமென்று வற்புறுத்துவது முறையான காரியமன்று என்றும், தம் உடல் நிலைக்குத் தஞ்சாவூரே ஏற்ற இடமாய் இருக்கிறதென்றும் தெரிவித்தார். ஆனாலும், அவர் விசாரணைக் கமிட்டியின் முன் சாட்சியம் கொடுக்கச் சென்னைக்கு வரவேண்டியவரானுர். சென்னைக்கு வந்த முதலியாரவர்கள் சென்னையிலே துவிபாஷி தொழிலை நடத்தி வந்தார். இவ்வாறு இருக்கையில், மக்களால் பெரிதும் கொண்டாடப்படுவதும் சிதம்பரம் என்று சொல்லப்படுவதுமாகிய தில்லையில் பல கைங்கரியங்கள் நடத்த எண்ணி, முதலியார் அவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டுவந்தார்.

சென்னையிலிருந்த கம்பெனி அதிகாரிகள் தஞ்சாவூர் அரசருக்குக் கடன் கொடுத்தவர்களைக் குறித்து விசாரணை ஆரம்பித்து நடத்தினுர்கள். அந்த விசாரணையில் பச்சையப்ப முதலியார் மீது யாதொரு குற்றமும் ஏற்படவில்லை. பச்சையப்ப முதலியாருக்குச் சென்னை வாழ்க்கை சரிப்படவில்லை. ஆகவே, அவர்

சென்னை அரசாங்க அதிகாரிகளிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு தஞ்சாவூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

முதலியாரவர்களுக்குப் பலவிதத் துன்பங்களினால் உடல் நிலை தளர்ந்து வந்தது. இவ்வாறாக அவருடைய உடல் நிலை தளர்ந்து வந்து கடைசியில் அவருக்குப் பாரிச வாயு உண்டாயிற்று. பிறகு அவருக்கு மது மேக ரோகம் என்னும் நீரிழிவு வியாதி உண்டாயிற்று. வயிற்று வலி, மூல ரோகம் முதலான வியாதிகளும் ஏற்பட்டு, அவரைப் பெரிதும் துன்பப்படுத்திக்கொண்டு வந்தன. ஆகவே முதலியாரவர்கள் இடம் விட்டு இடம் மாறினால் நன்மை உண்டாகக் கூடும் என்று கருதிக் கும்பகோணத்திற்குச் சென்றார். அங்குச் சென்ற பிறகும் அவருடைய நோய்கள் நீங்காமல் இருந்து வந்தன. ஆகவே, முதலியாரவர்கள் தமக்கு மரண காலம் சமீபித்து விட்டதென்று கருதித் தம்முடைய மரண சாசனப்பத்திரத்தை 1794-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ஆந் தேதி எழுதி முடித்தார். முதலியாரவர்கள் தாம் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் பௌனி நாராயணப்பிள்ளை அவர்களுக்குத் தம் கைப்படவே ஒரு கடிதம் எழுதி, அதில் தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அக்கடிதத்தைக் கவனிக்கும்போது முதலியாரவர்கள் தம்முடைய அந்திய காலத்தை அறிந்திருந்தாரென்பதும், பிறர் பொருள்மீது அவர் எத்தகைய ஆசையும் கொண்டிருக்கவில்லை என்பதும் தெரிகிறது.

பின்னர்ப் பச்சையப்ப முதலியார் திருவையாறு என்னும் பதியில் உயிர்விட வேண்டுமென்று கருதியவ

ராய், அந்தப் பதிக்குச் சென்றார். அவர் 1794–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆந் தேதி இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தார்.

பச்சையப்ப முதலியாரவர்கள் தாம் இறப்பதற்கு முன் மரண சாசனம் ஒன்றை எழுதி, அதில் தம்முடைய சொத்துக்களைச் செலவிட வேண்டிய வகையைக் குறிப்பிட்டிருந்தார் அல்லவா? அதைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்:

அந்த உயிலில் முதலியாரவர்கள் தமக்குப் பின்னும் தம்முடைய காரியங்களைப் பௌனி நாராயணப் பிள்ளை அவர்களும், அவருடைய குமாரரான ஐயாப் பிள்ளை அவர்களும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று எழுதி இருக்கிறார். தம்முடைய சொத்தில் ஓர் இலட்சம் வராகனைப் பணத்துக்குக் கெடுதல் இல்லாத இடத்தில் வட்டிக்குவிட்டு, அந்த வட்டியைக் கொண்டு காசி முதல் இராமேசுவரம் வரையிலுமுள்ள கோயில்களில் தாம் செய்து வந்த கட்டளைகளைச் செய்துவர வேண்டுமென்றும், கட்டிமுடிக்கப்படாமல் இருக்கும் சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்றும், தம்முடைய இரண்டாம் மனைவியாரின் பெண்ணுக்குக் கலியாணத்திற்காக ஐயாயிரம் பொன் கொடுக்க வேண்டுமென்றும், தம்முடைய சகோதரியார் அச்சம்மாளின் மைந்தராகிய 'முத்தையா முதலி என்னும் புத்தி யில்லாத பிள்ளையாண்டானுக்கு' ஐயாயிரம் பூவராகன் கொடுக்க வேண்டுமென்றும், பௌனி நாராயணப் பிள்ளை குமாரர் ஐயாப் பிள்ளைக்கும், அவர் குழந்தைகளுக்கும் பதினுயிரம் வராகன் ரொக்கங்

கொடுக்க வேண்டுமென்றும், மிகுதிப் பணத்தைக் கொண்டு தம்முடைய முதல் மனைவியாரும் தமக்கை யாரும் சொல்லுகிறபடி நாராயணப் பிள்ளையவர்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்து கொண்டு போக வேண்டுமென்றும் எழுதி இருந்தார்.

முதலியார் அவர்கள் நன்றி மறவாதவர். ஆகை யால், தம் குருக்கள் ஐயாவையும், தம் கணக்குப் பிள்ளை யையும் மறவாமல் அவர்களுக்கும் தம் சொத்தில் கொஞ்சம் தொகை கிடைக்கும்படியாகத் தம் உயிலில் எழுதி வைத்தார்.

பச்சையப்ப முதலியாரவர்கள் தம்முடைய உயி லில் தம் சகோதரியாரின் குமாரராகிய முத்தையா முதலியாரைப் 'புத்தி யில்லாத பிள்ளையாண்டான்,' என்று குறிப்பிட்டிருத்தல் பலவகையிலும் பொருத்த மானதேயாகுமென்பது பின்னால் கூறப்படும் செய்தி களால் நன்கு விளங்கும்.

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண் டாட்டம்,' என்பது பழமொழி அல்லவா! அதற்கு இணங்கப் பச்சையப்ப முதலியார் இறந்த பிறகு அவ ருடைய குடும்ப விவகாரங்கள் போன போக்கைக் கவ னிக்குங்கால், அவை மனத்துக்கு அவ்வளவு ஆறுதலை அளிக்கக் கூடியவைகளாய் இல்லை. முதலியாரவர்கள், முதல் மனைவியார் இருக்கும் போதே பிள்ளைப்பேற்றைக் கருதி இரண்டா முறை ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்து கொண்டாரென்றும், அந்தப் பெண்ணும், முதலியாரின் முதல் மனைவியாரும் தங்களுக்குள் ஒற் றுமை இன்றிக் கலகம் விளைத்துக் கொண்டிருந்தார்

களென்றும், அதனல் முதலியாரவர்கள் சில நேரங்களில் வருந்துவதுண்டென்றும் நாம் முன்னே கூறியிருக்கிறோம் அல்லவா? கணவர் இருந்தபோதே மனைவியர் இவ்வாருக இருந்தாரென்றால், கணவர் போய்விட்ட பிறகு, அதிலும், ஏராளமான சொத்துக்களை வைத்துவிட்டுப் போன பிறகு, அவருடைய மனைவியர்களுக்குள் ஏற்பட்ட கலகங்களையும், சண்டைகளையும், இவை போன்ற பிறவற்றையும் கேட்டு நாம் வருந்தாமலிருக்க முடியாது.

## 12. தலைவரை இழந்த குடும்பம்

பச்சையப்ப முதலியார் இறந்த பிறகு அவருடைய மனைவியர்களுள் அவருடைய சொத்துக்களைக் குறித்துப் பெருத்த விவாதங்கள் ஏற்பட்டு, அவை நாளடைவில் மிகவும் வருந்தத்தக்க நிலைக்கு வந்துவிட்டன. முதலியாரவர்கள் தம்முடைய மரண சாசனத்தில் தம்முடைய இரண்டாம் மனைவியாருக்கு ஒருவிதச் சொத்தும் எழுதி வைக்காமல் போய்விட்டது வருந்தத்தக்க செய்தியேயாகும்.

பச்சையப்ப முதலியாருக்கு இரண்டு சகோதரிமார்கள் உண்டென்றும், அவர்களில் ஒரு சகோதரியாகிய சுப்பம்மாள் என்பவருக்கு அய்யாளம்மாள் என்ற ஒரு புத்திரியார் இருந்தனரென்றும், அந்த அம்மையாரைப் பச்சையப்ப முதலியார் பௌனி நாராயணப் பிள்ளை அவர்களது எண்ணத்திற்கு இணங்கி மணந்துகொண்டார் என்றும் கூறினேமல்லவா? பச்சையப்ப முதலியாரின் மற்றொரு சகோதரியாரின் பெயர் அச்சம்மாள் என்றும், அந்த அம்மாள் கூடலூர்த் தெய்வநாயக முதலி

யார் என்பாரை மணந்து கொண்டாரென்றும் கூறினோ மல்லவா? இவர்களுக்கு முத்தையா முதலியார் என்ற ஒரு குமாரர் பிறந்திருந்தார். அவர் தக்க வயதடைந்த வுடன் அழகம்மாள், காமாட்சி அம்மாள், பெருந்தேவி அம்மாள், காமாட்சி அம்மாள்,* சிவகங்கையம்மாள் என்னும் ஐந்து மங்கையர்களை விவாகஞ் செய்துகொண் டிருந்தார். அவர்களில் முதல் மனைவியாராகிய அழகம் மாளுக்குக் காமம்மாள் என்ற பெண் குழந்தையும், இரண்டாம் மனைவியாராகிய காமாட்சி அம்மாளுக்கு ஐயாசாமி என்ற ஆண் குழந்தையும், பொன்னுயி அம் மாள் என்ற பெண் குழந்தையும் பிறந்திருந்தன.

முதலியார் அவர்கள் இறந்த பிறகு நாம் மேற் கூறிய முத்தையா முதலியார் என்பவர் முதலியார் அவர்களின் இரண்டாம் மனைவியாருடன் சேர்ந்து கலகம் விளைவித்துக் கொண்டிருந்தார். முத் தையா முதலியார், முதலியார் அவர்களின் இரண் டாம் மனைவியாருக்குச் சரிபாதிப் பங்கு கிடைத்தால், அதனால் தமக்கு அந்த அம்மையார் மூலமாக ஏதேனும் சொத்துக் கிடைக்கும் என்ற சுய நலத்தை முதன்மை யாகக் கருதிக் காரியங்களைச் செய்துகொண்டு போனார். முதலியார் அவர்கள் இறந்த உடனே அவருடைய இரண்டு மனைவியர்களுக்குள்ளும் பெருத்த கலகங்கள் உண்டாயின. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்ட மல்லவா? அதற்கேற்ப கலகம்பட்ட அம்மனைவியர்களுக்கு இடையில் இருந்தவர்களுடைய போக்குச் சொல்லத் தேவையில்லை. ஆகவே, முத்தைய

* இப்பெயர் கொண்ட மனைவியர் இருவர்.

முதலியார், பச்சையப்ப முதலியாரவர்களுடைய இரண்டாம் மனைவியாருடன் சேர்ந்துகொண்டு, தம்முடைய பெரிய தாயாருக்கும், முதலியாரவர்களுடைய முதல் மனைவியாருக்கும் விரோதமாகக் காரியங்களைச் செய்து கொண்டு போகவே, முதலியாரவர்களுடைய தமக்கையாரும், மனைவியாரும் தம்முடைய நிலைமையை விளக்கிப் பௌனி நாராயணப் பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதி அனுப்பினர். அக் கடிதத்தில் எழுதியிருந்த செய்திகளைக் கண்ட பிள்ளையவர்கள் முதலியாரவர்களுடைய இரண்டாம் மனைவியாரும் முத்தையா முதலியாரும் கலகம் செய்துகொண்டு போகாமல் இருக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அவர் முதலியார் அவர்களுடைய முதல் மனைவியாரையும் சகோதரியாரையும் சென்னைக்கு வரவழைத்து, அவர்களைக்கொண்டு முதலியாரவர்களுக்கு நடத்த வேண்டிய கருமங்களை அதிக பணச் செலவில் நடப்பித்தார்.

முதலியாரவர்களுக்குக் கரும காரியங்கள் நடந்தேறிய பிறகு, பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள் முதலியாரவர்கள் எழுதிவைத்த மரண சாசனத்துக்கேற்பக் காரியங்களைச் செய்து கொண்டுபோக, 'ப்ரோபேட்டு'* என்னும் அதிகாரப் பத்திரத்தைத் தமக்குக் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டார். ஆனால், முதலியாரவர்களின் இரண்டாம் மனைவியாராகிய பழநியாயி அம்மாள் தம் கணவருடைய சொத்தில் தமக்குச் சரிபாதிப் பங்கு உண்டென்று வழக்காடினர். ஆனால், அந்த அம்மாள்

*Probate.

தொடுத்த வழக்குத் தோற்றுப் போய்விட்டது. பௌனி நாராயணப் பிள்ளை அவர்களுக்குப் 'ப்ரோபேட்டு' என்னும் அதிகாரப் பத்திரம் கொடுக்கப்பட்டது. பிறகு முதலியாரவர்களின் இரண்டாம் மனைவியார் தம்முடைய வழக்குத் தோற்றுப் போய்விட்டதே என்ற மனக் கவலை ஒன்றினாலேயே நோய்வாய்ப்பட்டு, 1794-ஆம் ஆண்டு கடைசியில் இறந்து விட்டார். அந்த அம்மாள் இறந்த பிறகு, அந்த அம்மாளுக்கு இருந்த ஒரு பெண் குழந்தையும் இறந்துவிட்டது.

நாம் மேற்கூறிய விவகாரங்கள் எல்லாம் தீர்ந்த பிறகு, பௌனி நாராயணப் பிள்ளை அவர்கள் முதலியார் அவர்களுடைய சொத்துக்கு உரியவர்களான அவருடைய முதல் மனைவியாரிடமும், தமக்கையாரிடமும் முதலியாருடைய செல்வத்தில் ரொக்கக் கையிருப்பாய் இருப்பது இலட்சத்துப் பதினாறு ஆயிரத்து முந்நூறு *பூவராகன் என்றும், 'இலேவாதேவியில் வர வேண்டியது இலட்சத்து இருபதினாயிரத்து இரு நூற்றுப் பதினாறு பூவராகன்கள் ஆகுமென்றும் தெரிவித்தார்.

அதைக் கேட்ட பிறகு அவர்கள், பௌனி நாராயணப் பிள்ளையவர்களும், அவர்களுடைய சந்ததியார்களும் முதலியாரவர்களுடைய அறச் செயல்களை நடத்திக் கொண்டு போகவேண்டுமென்று ஓர் ஏற்பாடு செய்து கொண்டார்கள். பின்னர் முதலியாரவர்களுடைய தமக்கையாராகிய சுப்பம்மாளும், பௌனி நாராயணப் பிள்ளை அவர்களும் முறையே 1802-ஆம்

---

*ஒரு பூவராகன் என்பது மூன்றரை ரூபாய்.

ஆண்டு ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர்.

பௌனி நாராயணப் பிள்ளை அவர்களுக்கு ஒரு குமாரர் இருந்தார். அவருடைய பெயர் ஐயாப் பிள்ளை என்பது. அவர் தம் தகப்பனுரைப்போலவே எல்லாவித நற்குணங்களுக்கும் உறைவிடமானவர். பௌனி நாராயணப் பிள்ளைக்குப் பிறகு ஐயாப் பிள்ளை அவர்களே முதலியார் அவர்களுடைய காரியங்களை நடத்திக் கொண்டு வந்தார். அப்போது, முதலியாரவர்களுடைய முதல் மனைவியார் சிவசிதம்பரம் என்னும் ஒருவனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். பிறகு அந்தச் சுவீகாரம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பின்னர் அய்யாளம்மாள் 1817–ஆம் ஆண்டு கும்பகோணத்தில் மரணமடைந்தார்.

அந்த அம்மாள் இறந்த பிறகு சுவீகாரப் பிள்ளையாகிய சிவ சிதம்பரம் என்பவன் முதலியாரவர்களுடைய சொத்துக்கள் தனக்கே சொந்தமாகுமென்று ஐயாப் பிள்ளையுடன் வாதாடினுன். அதனுல் ஒன்றும் பயன் ஏற்படவில்லை. இவ்வாறு இருக்கையில், ஒருவர் பின் ஒருவராகச் சிவசிதம்பரமும் அவன் மனைவியும் இறந்தனர்.

பௌனி நாராயணப் பிள்ளை அவர்களுடைய குமாரராகிய ஐயாப் பிள்ளை அவர்களும் கால கதியால் இறந்து போனுர். அவருக்கு அண்ணுசாமிப் பிள்ளை என்ற ஒரு குமாரர் இருந்தார். அவர் மிகவும் இளவயதினராயிருந்தபடியால், அவருடைய காரியங்களைத் தெளிசிங்கப் பிள்ளை என்பவர் பார்த்துவந்தார். அவர்

பௌனி நாராயணப் பிள்ளை அவர்களுடைய மூத்த குமாரத்தியை மணந்திருந்தார்.

அப்போது பச்சையப்ப முதலியார் பந்துக்களில் உயிருடன் இருந்தவர், அவர் தமக்கையார் குமாரராகிய முத்தையா முதலியார் என்னும் 'புத்தியில்லாப் பிள்ளை யாண்டானே' ஆவர். அவர் தம் அம்மானுராகிய பச்சையப்ப முதலியாருடைய செல்வம் முழுவதும் தமக்கே சேரவேண்டும் என்று அண்ணுசாமிப் பிள்ளைமீது வழக்குத் தொடர்ந்தார். எனினும், வழக்கு விசாரணைக்கு வரும் முன்னரே அவர் இறந்து விட்டார். பிறகு அவருடைய குமாரத்தியாராகிய காமம்மாளும் புத்திரனுகிய ஐயாசாமியும் அண்ணுசாமிப் பிள்ளைமீது வழக்குத் தொடர்ந்தார்கள். அதனுல் ஒன்றும் பயன் உண்டாகவில்லை. கடைசியில் அண்ணுசாமிப் பிள்ளையவர்கள் 1816–ஆம் ஆண்டில் நீதிமன்றத்தார் மூலம் ஆட்சியாளரிடம் 2,42,080 ரூபாய் பெறுமானமுள்ள பத்திரங்களையும் தஞ்சாவூர் அரசர் முதலியார் அவர்களிடம் அடைமானம் வைத்து மீட்காமல் போன நகைகளையும், முதலியாரவர்களுடைய சொத்து என்று ஒப்படைத்தார். அப்போது முத்தையா முதலியாருடைய குமாரத்தியாகிய காமு அம்மாளிடம் பச்சையப்ப முதலியாருடைய நகைகளில் பெரும்பாகம் இருந்தது என்றும் தெரிகிறது.

நாம், முன்னேரிடத்தில் முதலியாரவர்கள் தஞ்சாவூர் அரசருக்குப் பெருந்தொகை கொடுத்து இருந்தாரென்றும், அத்தொகையைக் கொண்டு தஞ்சாவூர் அரசர் கிழக்கிந்திய கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டிய

கடனைத் தீர்த்தாரென்றும், தாம் கடனாகக் கொடுத்த பணத்துக்குக் கேடு நேரிடாமல் இருப்பதற்காக முதலியா ரவர்கள் தஞ்சாவூரில் இருந்துகொண்டு 'ரொக்க லேவா தேவி' செய்து கொண்டு வந்தார் என்றும் கூறினேமல்லவா? இவ்வாறாக முதலியாரவர்கள் தஞ்சைமா நகரில் இருக்கையில், அரசர் அவர்கள் முதலியாரவர்களுக்குத் "தென்னங் குடி" என்னும் ஊரைச் சுரோத்திரியமாகக் கொடுத்திருந்தார். அந்த ஊரினுடைய வரும்படியைக் கொண்டு சிதம்பரம் நடராசப் பெருமானுக்கு மாலைக் கட்டளை நடைபெற வேண்டுமென்று முதலியார் எழுதி இருந்தார். அதன்படியே திருப்பனந்தாள் மடத்தினர், அந்தக் கட்டளையை நடத்திக்கொண்டுவர ஏது உண்டாயிற்று. மற்ற அறங்களெல்லாம் நின்று விட்டன.

பச்சையப்ப முதலியார் உறவினர்களான ஐயாசாமியும், காமு அம்மாளும் நாளடைவில் மாண்டனர். அவர்களுக்குப்பிறகு முத்தையா முதலியாரின் கடைசி மனைவியாராகிய சிவகங்கை அம்மாள் பச்சையப்ப முதலியார் சொத்துத் தமக்குச் சேரவேண்டுமென்று வழக்காடினர். அதனால் ஒன்றும் நன்மை உண்டாகவில்லை.

அப்போது ஒரு கொழுத்த வக்கில் "துவிபாஷி" தோன்றிக் கோர்ட்டில் திக்கில்லாத முதலியார் சொத்து என்று ரூபா கட்டப்பட்டிருப்பதைக் குறித்து அண்ணாசாமிப் பிள்ளையிடம் பேசி அச்சொத்தின் பெரும்பகுதியைத் தாம் அடையவேண்டுமென்று கருதினர். இந்த ஏற்பாட்டுக்கு அண்ணாசாமிப் பிள்ளை இணங்காமல் போகவே, அந்த வக்கில் துவிபாஷி அண்ணாசாமிப்

பிள்ளை அவர்கள் காலஞ் சென்ற பச்சையப்ப முதலியார் அவர்களுடைய மரண சாசனத்தில் குறித்தபடி அறங்களை நடத்தவில்லையென்று பிள்ளையவர்கள் மீது நீதி மன்றத்தில் ஒரு வழக்குத் தொடங்கினர்.

## 13. ஜார்ஜ் நார்ட்டன் துரை

சென்னையில் வெம்பாக்கம் போலீஸ் இராகவாச்சாரியார் என்ற ஒரு பெரியார் இருந்தார். பச்சையப்ப முதலியாருடைய சொத்துக்களைக் குறித்துப் பற்பல வழக்குகள் ஏற்படவே, அவர் அதைப்பற்றி அப்போது அட்வகேட்டு ஜெனரலாயிருந்த "சர் ஹெர்பர்ட்டு காம்டன்" என்பாரிடம் கூறினர். அதன் மேல் அவர் கோர்ட்டில் வழக்குத் தொடுத்துப் பச்சையப்ப முதலியாருடைய அறச்செயல்களைச் செய்வதற்கு அறத்தலைவராய் நியமிக்கப் பட்டிருந்தவருடைய பரம்பரையில் அப்போது அறப்பாது காப்பாளராயிருந்தவரிடமிருந்து அறச் செயல்களைப் பற்றிய விவரங்களுக்கும் சொத்துக்களுக்கும் கணக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார். அப்போது, அட்வகேட்டு ஜெனரலான சர் ஹெர்பர்ட்டு காம்டன் சீமைக்குச் சென்று விட்டார். அவருக்குப் பதிலாக ஜார்ஜ் நார்ட்டன் அட்வகேட்டு ஜெனரலானர். கோர்ட்டார் மேற்கூறிய தொகையைப் பச்சையப்ப முதலியாருடைய அறங்களை நடத்தி வந்தவர்களிடமிருந்து முழுவதும் பெறக்கூடவில்லை. கடைசியில் கோர்ட்டார் பச்சையப்ப முதலியார் சொத்து என்று அண்ணுசாமிப் பிள்ளையவர்கள் பொதுக்கட்டின தொகை, தஞ்சாவூர் மன்னரிடமிருந்து அவருக்கு வர வேண்டிய தொகை, நகைகள் விற்பனையால் வந்த

தொகை, இடையில் ஏற்பட்ட வட்டித் தொகை ஆகிய இவைகளின் மூலமாகப் பச்சையப்ப முதலியாருடைய சொத்து நான்கு இலட்சம் ரூபாய்க்குமேல் ஆகுமென்று முடிவு கட்டினார்கள். பின்னும் முதலியாரவர்களுடைய அறங்களைப் பற்றிய விவரங்கள் பல, எக்ஸிகியூட்டர்கள் என்று சொல்லப்படும் நிருவாகிகளிடமிருந்தும் கோர்ட்டாருக்குக் கிடைத்தன. இவைகளை யெல்லாம் ஆதாரமாகக் கொண்டு, 1832-ஆம் ஆண்டில் கோர்ட்டார் ஓர் உத்தரவு பிறப்பித்துப் பச்சையப்ப முதலியாருடைய அறச் செயல்களை நடத்துவதற்காக, ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்களுடைய ஆலோசனைக்கிணங்க, இந்து மதத்தைச் சேர்ந்த ஒன்பதுபேரை அறநிலையப் பாதுகாப்பாளர்களாக நியமித்தனர். அவர்கள் பச்சையப்ப முதலியாரவர்கள் கருதிய அறங்களைக் குறைவின்றி நடத்தி வந்தார்கள். நார்ட்டன் துரையவர்கள் அப்போது சென்னைக் கவர்னராயிருந்த எல்பின்ஸ்டன் பிரபுவினிடத்தில் சமயம் நேர்ந்தபோதெல்லாம் கல்வியின் முக்கியத்தைக் குறித்துச் சொல்லிவந்தார். கவர்னர் அவர்களுக்கும் சென்னை மாகாணத்தில் கல்வியை விருத்தி செய்ய வேண்டுமென்ற கருத்து அதற்கு முன்னரே இருந்தது. ஆகவே, நார்ட்டன் துரையவர்கள் அதைக் குறித்து அடிக்கடி வற்புறுத்திக் கூறி வந்தமை சிறந்த தூண்டுகோலாய் இருந்து வந்தது. கடைசியில் எல்பின்ஸ்டன் பிரபு ஜார்ஜ் நார்ட்டன் ஆகிய இவர்களுடைய பெருமுயற்சியால், கோர்ட்டார் 1841-ஆம் ஆண்டு ஒரு சட்டம் பிறப்பித்து, அதன் மூலம் பச்சையப்ப முதலியார் சொத்தில் நாலரை இலட்ச ரூபாய்களில் வேறுவகை அறத்திற்கு வேண்டியது போக,

N53

மற்றத் தொகையைக் கொண்டு சிறப்பாகச் சென்னையிலும், பொதுவாகச் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிற இடங்களிலும் கல்வி நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தனர். நான்கு இலட்சம் ரூபாய் 1832, 1841-ஆம் ஆண்டுகளுக்கிடையில், வட்டியுடனும் சில சொத்துக்களுடனும் சுமார் எட்டு இலட்சம் ரூபாய்க்கு மேலாயிற்று. அதில் சிலவகை அறத்திற்கு நாலரை இலட்சம் ரூபாய் போக, மிகுந்து இருந்த மூன்றரை இலட்சம் ரூபாய் தென்னிந்தியாவில், சிறப்பாகச் சென்னை நகரில், கல்வியை வளர்ப்பதற்காக ஒதுக்கி வைக்கப் பட்டதென்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

ஜார்ஜ் நார்ட்டன் அவர்கள் தென்னிந்தியாவில் கல்வியைப் பரப்ப அரும்பாடு பட்டவர் ஆவர். அவருடைய அரிய முயற்சியினாலேதான் சென்னையில் பச்சையப்பன் கல்லூரி ஏற்பட்டது. அவருடைய முயற்சியினால்தான் இப்போது அதில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியின் பயனை அடைய ஏது ஏற்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள கல்வி கற்ற பெரு மக்களிற் சிலரேனும் ஜார்ஜ் நார்ட்டனுக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

## 14. பச்சையப்பன் கல்லூரி

நீதி மன்றத்தினர் 1841-ஆம் ஆண்டில் ஏற்படுத்திய கட்டளைக்கிணங்க, பச்சையப்பரின் நிதியின் துணை கொண்டு அவர் பெயருடன் 1842-ஆம் ஆண்டில், 'மத்தியதரப் பாடசாலை,' என்ற ஒரு கல்விச் சாலை சென்னையில் ஏற்பட்டது. ஏழைகளாயுள்ள சிறுவர்களுக்கு இப்பள்ளிக்கூடத்தில் முதன் முதலாக இலவச

மாகக் கல்வி கற்பிக்கப்பட்டது. பின்னர், சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்த பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கப்பட்டது. இப்பள்ளிக்கூடத்தில் ஆங்கிலமும், பூதபௌதிகமும், தமிழும், தெலுங்கும் கற்பிக்கப் பட்டு வந்தன. சென்னையில் சின்னக்கடைத் தெருவிலிருக்கும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிக்கு 1846–ஆம் ஆண்டில் ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்களால் பெருத்த கூட்டத்திற்கு இடையில் கால்கோள் விழா நடத்தப் பெற்றது, அப்போது நார்ட்டன் துரை அவர்கள் கல்வியின் சிறப்பைப் பற்றி மிகவும் உருக்கமானதொரு சொற்பொழிவாற்றினர். பிறகு அங்கே கல்லூரிக்கென்று ஒரு பெரிய கட்டடமும் கட்டப்பட்டது. இக்கட்டடம் 1850–ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடத்தை அப்போது கவர்னராயிருந்த சர் "ஹென்றி பாடிசன்" என்பார் திறந்து வைத்துக் கல்வியின் மேன்மையைப் பற்றிப் பேசினர். அப்போது நார்ட்டன் துரையவர்களும் கல்வியினல் ஏற்படக்கூடிய நன்மையைக் குறித்து நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

1858–ஆம் ஆண்டு பள்ளிக்கூட அதிகாரிகள் பிள்ளைகளைப் பல்கலைக் கழக ஆரம்பத் தேர்வுக்கு அனுப்பி இருக்கிருர்கள்; உயர்நிலைக் கல்வியைப் பெற ஆசைகொண்ட பிள்ளைகளுக்கு உதவிச் சம்பளம் கொடுத்து, மாகாணக் கல்லூரிக்கு அனுப்பி வந்தார்கள். 1865–ஆம் ஆண்டில் அறப்பாது காவலர் பள்ளிக்கூடத்தை ஒழுங்குபடுத்தி ஆரம்பக்கல்வியைக் கோவிந்து நாயக்கர் என்பவருடைய பெயரால் நடைபெறச் செய்தார்கள். கோவிந்து நாயக்கர் சென்னையில் சிறந்த

பணக்காரராயிருந்தவர். அவர் கல்வி வளர்ச்சியின் தேவையை உணர்ந்து, தம் சொத்துக்களைக் கல்வி வளர்ச்சிக்கெனப் பச்சையப்பன் அறநிலையப்பாது காவலரிடம் ஒப்படைத்தார். இத்தகைய புண்ணியவான்களல்லவோ நமது நாட்டுக் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்களாவார்கள் !

ஆரம்ப காலத்தில், "மிஸ்டர் பேசில் லவ்ரி" என்ற துரைமகனார் பச்சையப்பன் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராயிருந்து கல்லூரியை முன்னுக்குக்கொண்டு வர அரும்பாடு பட்டார். பச்சையப்பன் கல்லூரியின் உதவியைப் பாராட்டி அப்போது கல்வி இலாக்கா அதிகாரியாய் இருந்த "மிஸ்டர் பவல் துரை"யவர்கள் பேசியிருக்கிறார்.

1880–ஆம் ஆண்டில் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி இரண்டாந்தரக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. 1889–ஆம் ஆண்டில் பி. ஏ. வகுப்பும் ஏற்படுத்தப்பட்டது; 1890–91–ஆம் ஆண்டில் பி. ஏ. தேர்வுக்குச் சென்ற இருபத்திரண்டு மாணவர்களில் 19 பேர் மெச்சத்தக்க விதமாகத் தேறினார்கள். மிஸ்டர் லெப்பர் என்பவர் இந்தக் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராய் இருந்தபோதும் இக்கல்லூரி பற்பல துறைகளில் விருத்தி அடைந்தது. நூல் நிலையத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. விளையாடும் இடம் இருக்க வேண்டுவதன் தேவையைக் குறித்து, லெப்பர் அரும்பாடு பட்டிருக்கிறார். 1915–ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் சேத்துப்பட்டில் பத்து ஏக்கர் பரப்பு உள்ள நிலத்தை வெகுமதியாகப் பச்சையப்பன் கல்லூரிக்கு அளித்தனர். மிஸ்டர்

லெப்பர், மாணவர்கள் விடுதி நிலையம் ஒன்றை ஏற்படுத்தினர். இப்போது சேத்துப் பட்டில் மாணவர்களுக்கெனப் பெருந் தொகை செலவிட்டுப் பெரியதொரு விடுதி நிலையம் கட்டப்பட்டு இருக்கிறது.

மிஸ்டர் ஜே. ஏ. ஏட்ஸ் அவர்களும் இந்தக் கல்லூரி வளர்ச்சியைக் கருதிப் பாடுபட்டிருக்கிறார். அவர் கல்வியை வளர்க்கும் முறையில் பல திருத்தங்களைச் செய்திருக்கிறார். அவருடைய காலத்தில் மாணவர்களுடைய தொகையும் அதிகரித்தது. அவரும் நூல் நிலையத்தில் பல திருத்தங்களைச் செய்தார். அதனால் இப்போது பச்சையப்பன் கல்லூரி நூல் நிலையம் தென்னிந்தியாவிலுள்ள பல கல்லூரி நூல் நிலையங்களுக்கிடையில் சிறந்து விளங்குகிறது. ஏட்ஸ் அவர்கள், சிறுவர்கள் கல்லூரியைப் பற்றி ஆவல் கொள்வதற்கான வேலைகளைச் செய்து வந்தார். அவர் மாணவர் உடற் பயிற்சிக் கழகத்தையும், நடன நிலையத்தையும் ஏற்படுத்தினர். பச்சையப்பன் கல்லூரிக் கழகத்தையும்* ஏற்படுத்தினர். பச்சையப்பன் கல்லூரி ஆரம்ப நாளைக் கொண்டாடவும், ஆண்டுதோறும் விளையாட்டுகளை நடப்பிக்கவும், கல்லூரி சம்பந்தமான செய்திகளை அறிவிக்கும் வெளியீடு* ஒன்றை ஆண்டுதோறும் வெளி யிடவும், ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிக்கவும் ஏற்பாடு செய்து, அவைகளைச் செவ்வையாக நடத்தி வந்தார். அவருக்குப் பின் வந்த பிரின்ஸிபால்கள் காலத்திலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. சிறப்பாக மிஸ்டர் ஜே. ஸி. ரோலோ, மிஸ்டர் ரென், மிஸ்டர் இரத்தினசாமி ஆகிய இவர்கள் தலை

*College Council. *Calender

மைப் பேராசிரியர்களாக இருந்தபோது பல திருத்தங்கள் செய்யப்பட்டன. பச்சையப்பன் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராக விளங்கிய ஸ்ரீ சின்னதம்பி பிள்ளை அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரிய பல வேலைகளைச் செய்து வந்தார். இப்போது கல்லூரியில் எம். ஏ. வகுப்பும் ஏற்பட்டிருக்கின்றது. இக்கல்லூரியானது இப்போது சென்னையில் உள்ள சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகிறது.

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சில முக்கிய இடங்களிலும் கல்வி நிலையங்களை ஏற்படுத்தப் பச்சையப்பன் அறநிலையப் பாதுகாப்பாளர்கள் முயற்சி செய்யாமல் இருக்கவில்லை. அவர்களுடைய முயற்சியின் பலனாக 1846-ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் ஒரு பள்ளிக்கூடமும், 1850-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் ஒரு பள்ளிக்கூடமும் ஏற்பட்டன. அவை இரண்டும் நாளடைவில் வளர்ச்சியடைந்து, இப்போது சிறந்த உயர் நிலைப் பள்ளிகளாக விளங்கி வருகின்றன.

சென்னையில் பெருமாள் நாயக்கர் என்ற ஒரு கனவான் இருந்தார். அவருக்கு இரண்டாம் பிள்ளையாகப் பிறந்தவர் பி. டி. லீ. செங்கல்வராய நாயக்கர் என்பவர். பெருமாள் நாயக்கர் தாம் இறக்கும்போது தம்மைந்தருக்கென அதிகமாகச் சொத்துக்களை வைக்கவில்லை. ஆகவே, நாயக்கர் அவர்கள் தம் எண்ணத்தை வணிகத் துறையில் செலுத்தி, அளவற்ற பொருள்களைத் தம்முடைய திறமையினாலும் அறிவினாலும் சம்பாதித்துப் பலவகை அறங்களைச் செய்து வந்தார். அவர் சிறந்த வைஷ்ணவ பக்தர். அவர் தமக்கு அந்திம காலம் நெருங்கியதைக் கண்டு, தம்முடைய சொத்துக்கள் பலருக்கும் பயன்பட

வேண்டும் என்ற சீரிய நோக்கம் கொண்டு, அவைகளை அறவழியில் செலவிட வேண்டுமென்று உயில் எழுதி வைத்தார். அதன் மேற்பார்வையாளர்களாகப் பச்சையப்பன் அறநிலையப் பாதுகாப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்தச் சொத்தைக் கொண்டு பச்சையப்பன் அறநிலையப் பாதுகாப்பாளர்கள் 1886–ஆம் ஆண்டில் செங்கல்வராய நாயக்கருடைய பெயரால் வாணிகம், தொழிற்கல்வி ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுக்கும் ஒரு பாடசாலை ஏற்படுத்தினர்கள். மிஸ்டர் ஜான் ஆடம் பச்சையப்பன் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராய் இருந்தபோது வாணிகம், தொழிற் கல்வி ஆகிய இவைகளின் தேவையை உணர்ந்து, இவற்றிற்காகப் பாடுபட்டார். ஆகவே, அறப்பாதுகாவலர்கள் 1906–ஆம் ஆண்டில் செங்கல்வராய நாயக்கர் அறக்கல்விச் சாலையை எல்லாவித நலன்களோடும் கூடிய முதல்தரமான தொழிற் சாலைப் பள்ளிக்கூடமாக்கினர்கள். இப்போது அத் தொழிற்சாலையில் மெக்கானிக்கல் இஞ்சினீயரிங், சிவில் இஞ்சினீயரிங், ஜமுக்காளம் நெய்தல் முதலிய வேலைகளோடு வேறு பல வேலைகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இப்பள்ளிக்கூடம் சென்னையில் சிறப்புற்று விளங்குகிறது.

நம்முடைய நாட்டு முன்னேற்றத்திற்கு இத்தகைய புண்ணிய சீலர்களல்லவோ வேண்டும்! நாயக்கரவர்கள் தம் குலத்தினரையும் மறவாமல், அவர்களின் கல்வி நலத்திற்காகவும் ஏற்பாடு செய்திருக்கின்றார்.

நாளடைவில் கோவிந்து நாயக்கர், பி. டி. லீ. செங் கல்வராய நாயக்கர் ஆகிய இவர்களுடைய அடிச்சுவடு

களைப் பின்பற்றி, இன்னும் அநேகம் செல்வர்கள் பல அறங்களைப் பச்சையப்பன் அறநிலையப்பாதுகாவற்சபையினரிடம் ஒப்படைத்திருக்கின்றனர் என்பதும் பாராட்டத்தக்கதாகும்.

செல்லம்மாள் என்ற ஒருவர் கல்வி வளர்ச்சிக்காகப் பச்சையப்பன் அறநிலையத்தினரிடம் தம்முடைய சொத்துக்களை ஒப்படைத்திருக்கிறார். அவற்றிலிருந்து அநேகம் ஏழைப் பிள்ளைகளுக்கு உதவிச் சம்பளமும், சாப்பாட்டுக்குப் பணமும் கொடுக்கப்படுகின்றன.

நம் நாட்டு இளைஞர்கள் கல்வியில் வளர்ச்சி அடைவதற்கு இத்தகைய புண்ணிவான்களும், புண்ணியவதிகளும் நூற்றுக் கணக்காக முன் வருதல் வேண்டும். அவர்கள் செய்யும் அறங்கள் உலகம் உள்ளவரையில் நிலைத்து நின்று வளர்பிறைபோல வளர்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு சிலர் பச்சையப்ப முதலியார் தம்முடைய சொத்துக்களைப் பல கோவில்களுக்கும் கோவில் திருப்பணிகளுக்கும் எழுதி வைத்தாரென்றும், அவர் தம்முடைய மரண சாசனத்தில் கல்வி வளர்ச்சியைக் குறித்து ஒன்றும் சொல்லவில்லை என்றும் கூறுகின்றனர். அஃது எப்படியாயினும் ஆகுக. அவருடைய சொத்தைக் கொண்டு வெம்பாக்கம் இராகவாச்சாரியார், சர். ஹெர்பர்ட்டு காம்டன், மிஸ்டர் ஜார்ஜ் நார்ட்டன் ஆகிய இவர்கள் தென்னிந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கு வழி தேடியது நம்மனோர் அனைவராலும் பாராட்டத்தக்கதாகும். இவர்களுடைய புகழும் பச்சையப்பன் கல்லூரியுடன் கலந்து கல்லூரி மண்டபத்தின் முன் பச்சை

எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருக்கும் "பச்சையப்பன்" என்ற பெயருடன் சேர்ந்து என்றும் பசுமையாகவே நின்று விளங்கிக் கொண்டிருக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

பச்சையப்ப முதலியாருடைய அறங்கள் இன்றும் காசி முதல் இராமேசுவரம் வரையில் உள்ள பல கோயில்களில் நடைபெற்று வருகின்றன.

பச்சையப்பர் அறநிலைய உறுப்பினராய் இருந்த திவான் பகதூர் இராசரத்தின முதலியார், சர். சி. பி. இராமசாமி ஐயர், திவான் பகதூர் மாசிலாமணிப் பிள்ளை ஆகிய இவர்கள் பச்சையப்பர் அறநிலைக் கழக வளர்ச்சிக்கு அதிக நன்மை செய்து இருக்கிறார்கள். பச்சையப்பன் உணவு விடுதி ஏற்படுத்தும் செயலில் சர். சி. பி. இராசாமி ஐயர் எடுத்துக்கொண்ட ஊக்க மானது மிகவும் பாராட்டத் தக்கது. சென்னை மாநகரத்தில் சிறந்து விளங்கிய சர். பிட்டி தியாகராய செட்டியாரவர்களும், திவான் பகதூர் திருமலைப் பிள்ளையவர்களும் பச்சையப்பன் அறநிலைக் கழக உறுப்பினர்களாய் இருந்து அரிய பெரிய வேலைகளைச் செய்தார்கள் என்பதையும் மறக்க முடியாது. இப்போது, 1953–ஆம் ஆண்டு, பச்சையப்பன் அறநிலைக் கழகத் தலைவராய் இருப்பவர் திரு. எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை பீ. ஏ., பி. எல். ஆவர். அவரும் தம்மாலான நலத்தைச் செய்து வருகிறார். இராசா சர். முத்தைய செட்டியாரவர்களும் கல்லூரியின் நலங்கருதி உழைத்து வருகிறார்.

பச்சையப்பன் மண்டபத்தில் அநேகம் படங்கள் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில்

ஒன்று பச்சையப்ப முதலியாருடைய உருவப்படமாகும். பச்சையப்பரை ஆதரித்த பௌனி நாராயணப் பிள்ளை அவர்களுடைய படமும், ஜார்ஜ் நார்ட்டனுடைய படமும், இன்னும் சில புண்ணியவான்களுடைய படங்களும் மண்டபத்திற்கு அழகு செய்வதோடு, அம் மண்டபத்திற்குள் வருவோர் நல்ல எண்ணம் உள்ளவர்களாக – நாட்டு முன்னேற்றத்திற்கு உரிய காரியங்களைச் செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் நினைவுபடுத்துகின்றன.

---

# 2. சர். தி. முத்துசாமி ஐயர்

---

## 1. ஆரம்பம்

மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு இன்றியமை யாததாக வேண்டப்படுவது முயற்சியே ஆகும். முயற் சியை மேற்கொள்ளாதவர்கள் ஒன்றுக்கும் உதவியாக மாட்டார்கள். இதனாலன்றோ, 'ஊக்கமது கைவிடேல்,' 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்,' 'தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்,' என்பன போன்ற வாக்கியங்கள் ஏற்பட்டிருக்கின்றன! முயற்சி உள்ளவர்களாலேதான் நாடு முன்னேற்ற மடையும். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமா னால், அந்நாட்டிலுள்ளவர்கள் இடையறாத முயற்சியை மேற்கொண்டு இருத்தல்வேண்டும். முயற்சி இல்லாத வன் தனக்கு மாத்திரமல்லாமல், தன் நாட்டுக்கும் பயன் அற்றவனாகிறான். முயற்சி உடையவனோ, தன் முன்னேற் றத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்வதோடு தன் நாட்டையும் முன்னுக்குக் கொண்டுவந்து, அதைச் சிறப்புறச்செய்கிறான். முயற்சியை மேற்கொண்டவர் களால்தான் நாட்டில் செல்வம் பெருகும். நாட்டின் செல்வம் பெருகப் பெருக மக்கள் நலத்துடன் வாழ வழி ஏற்படும்.

மேல் நாடுகளும், அவற்றிலுள்ள மக்களும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அந்த நாடுகளில் உள்ளவர் கள் சோம்பலை அறவே ஒழித்து, இடையறா ஊக்கத்தை மேற்கொண்டு, காரியங்களைச் செய்வதே ஆகும். அவர்கள்

அத்தகைய ஊக்கத்தை முதன்மையாகக்கொண்டே தங்களுடைய நாட்டின் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு வருவதோடு பிற நாடுகளும் தங்களை விரும்பும் படி செய்து வருகிறார்கள். ஜப்பானியர் ஊக்கத்தை முதன்மையாகக் கொண்டு வருகிறார்களாகையால், அவர் கள் எல்லாத் துறைகளிலும் போட்டியிட முன் வந்திருக்கிறார்கள். அத்தகைய ஊக்கத்தை நமது நாட்டில் உள்ளவர்களும் மேற்கொண்டு நடப்பார்களானால், நம் நாடு சிறப்புற்ருேங்கும். நம் நாடு இயற்கை வளங் களுக்குப் பேர் போனது என்பது சொல்லாமலே விளங்கும். அவ்வாறு இயற்கை வளங்களுக்கு உறை விடமாயுள்ள நம் நாடு போதிய அளவுக்கு உயராமல் இருப்பதற்குக் காரணம் நம் நாட்டினர் தம்முடைய முன்னேற்றத்திற்கான முயற்சியை வேண்டுமளவுக்குச் செய்யாமல் இருத்தலே ஆகும். எனினும், நம் நாட்டின ரில் சிலர், முயற்சியே உருவெடுத்தாற்போலத் தோன்றி, அரிய பலசெயல்களைச் செய்து, முன்னுக்கு வந்திருக் கின்றனர் என்பதொன்றே நமக்கு ஒரு சிறிது ஆறுதலை அளிக்கின்றது. நம்மவர் பலர் இனியேனும், அம்முயற்சி யாளரைப் பின்பற்றியாவது, ஊக்கத்தை மேற் கொண்டு ஒழுகுவாராக.

இனி, தமிழ் நாட்டில் முயற்சியினல் சிறப்புற் ருேங்கிய சில பெரியோரில் ஒரு பெரியவரின் சரித் திரத்தை இங்கு நோக்குவோம்:

## 2. பெற்ரேர்

'தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்' என்று வழங்கப்படுவது தஞ்சாவூர் மாவட்டமாகும். இது

கங்கையின் புனிதமாய காவிரி யாற்றின் பாய்ச்சலால் வளம்பெற்று ஓங்குவதாகும். இத்தகைய சிறப்பினைக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர் என்னும் பெயரினைக் கொண்ட ஓர் அழகிய நகரம் உண்டு. இந்நகரமானது பண்டைப் பெருமையைத் தன்னகத்துக் கொண்டதாகும். நாயன்மார்களிற் பலர் இந்நகரைப் பெரிதும் போற்றிக் கொண்டாடி இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் தம்முடைய அன்பு மேலீட்டால், 'திருவாரூர்ப் பிறந்தார் எல்லார்க்கு மடியேன்,' என்று கூறியுள்ளார். இத்தகைய சிறப்பைப் பெற்ற திருவாரூருக்கு அருகில் உச்சுவாடி என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊர் திருவாரூருக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. அதில் வேங்கட நாராயண சாஸ்திரியார் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியார் கற்பு, அன்பு, அருள், அடக்கம், உண்மை முதலான நற்குணங்களைக் கொண்ட உத்தமியாராவர். கணவரும் மனைவியாரும் பரம ஏழைகளாய் இருந்தாலும் தங்கள் குடும்ப காரியங்களைத் தங்களுக்குள் மாறுபாடு ஒன்றுமின்றி இனிது நடத்தி வந்தார்கள். வேங்கட நாராயண சாஸ்திரியார் அவர்களுக்குக் கண் பார்வை கொஞ்சம் மங்கி இருந்ததென்று தெரிய வருகிறது. ஆகவே, அவருடைய மனைவியார் மிகவும் செட்டாகக் குடும்ப காரியங்களை நடத்த வேண்டியவரானர். அந்த அம்மையார் அறிவும் ஆற்றலும் நிரம்பப் பெற்றவராயிருந்தார்.

வேங்கட நாராயண சாஸ்திரியார் அவர்களுக்குக் காலக் கிரமத்தில் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் ஒரு பிள்ளையின் பெயர் வைத்திய நாத

சுவாமி ஐயர் என்பதாகும். மற்றொருவர் நமது சரித்திரத் தலைவராகிய முத்துசாமி ஐயர் அவர்களே ஆவர்.

## 3. ஐயரவர்களின் இளமைப் பருவம்

முத்துசாமி ஐயர் அவர்கள் சிறுவராயிருக்கும் போதே அவருடைய தகப்பனாராகிய வேங்கட நாராயண சாஸ்திரியார் இறந்துவிட்டார். ஆகவே, அவர்களுடைய குடும்பத்தைப் பாதுகாப்பவர் ஒருவரும் இலராயினர். குடும்பம் இவ்வாறாகவே, வைத்தியநாதசுவாமி ஐயரும், முத்துசாமி ஐயரும் தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களானார்கள். ஆகவே, அவர்களுடைய தாயார் உச்சுவாடி என்னும் ஊரை விட்டுத் தம்முடைய இரண்டு புதல்வர்களுடன் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். வேங்கட நாராயண சாஸ்திரியாரின் மனைவியார் கல்வியின் மேன்மையை உணர்ந்திருந்தாராகையால், தம் வறுமையையும் பொருட்படுத்தாமல், தம் பிள்ளைகளுக்குக் கல்வியை ஓரளவுக்குக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஆகவே, பிள்ளைகள் தமிழில் ஓரளவுக்குப் பயிற்சி பெற்றார்கள். அப்பயிற்சியுடன் அவர்கள் திருப்தியடைந்து குடும்பத்தை நடத்துவதற்காக ஏதாவதொரு வேலையை மேற்கொள்ள வேண்டியவர்களானார்கள்.

முத்துசாமி ஐயர் அவர்கள் ஊர்க் கணக்கப்பிள்ளை ஒருவரிடத்தில் திங்கள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சம்பளத்திற்கு வேலையிலமர்ந்தார். அவர் தம்முடைய பன்னிரண்டாவது வயது வரையில் அந்த ஊர்க் கணக்கப்பிள்ளை யினிடத்தில் எழுத்தாளராகவே இருந்து வந்தார். அவர் இவ்வாறு இருக்கையில் அவருடைய உறவினர்

களில் ஒருவர் ஒரு நல்ல நாளில் முத்துசாமி ஐயர் அவர்களுக்கு வழக்கம் போலப் புதிய சோமன் ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். முத்துசாமி ஐயர் அவர்கள் அதைக் கவனித்துப் பார்த்தார். அவருக்கு அது நல்ல சோமன் அல்லவென்று தோன்றியது. ஆகவே, அவர் அதைக் குறித்துத் தம் உறவினருடன் பேசினர். இவ்வாருக ஐயர் அவர்கள் பேசியதைக் கண்ட அந்த உறவினர் ஐயருடைய ஏழ்மைத் தனத்தைப் பழித்துக் கூறிப் 'பிறரிடமிருந்து நன்மையை எதிர்பார்ப்பவர்கள் இவ்வாறெல்லாம் பேசுதல் அழகல்ல,' என்று கடுகடுத்த முகத்துடன் சொன்னர். அதைக் கேட்ட ஐயரவர்கள் சினங்கொண்டு, அந்த சோமனை நன்ருக முறுக்கி, அதைத் தம் உறவினரின் மீது வீசி எறிந்தார். அதனல், அவருக்கு அந்தச் சோமன் கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே, ஐயரவர்கள் தமக்கு உடுத்துக்கொள்ள சோமன் ஒன்று இருக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, தமக்கு ஓய்வு நேர்ந்தபோதெல்லாம் வேறு வேலைகளைச் செய்து, அதனல் கிடைத்த பணத்தைக் கொண்டு தமக்கெனப் புதியதொரு சோமனைத் தாமே வாங்கிக் கொண்டார்.

## 4. முத்துசாமி நாயக்கரும் ஐயரவர்களும்

முத்துசாமி ஐயர் ஊர்க் கணக்கப் பிள்ளையினிடத்தில் எழுத்து வேலை செய்துகொண்டிருந்த போது திருவாரூரில் முத்துசாமி நாயக்கர் என்பவர் ஒருவர் தாசில்தாராக இருந்து வந்தார். அவரை மக்கள் மிகவும் கொண்டாடி வந்தார்கள்.

ஒருநாள் பக்கத்து ஊர் ஒன்றில் பெருமழை பெய்த மையினால் உடைப்புகள் ஏற்பட்டன என்று தாசில் தாருக்குச் செய்தி கிடைத்தது. அதைப் பார்த்து வரு வதற்காக ஒருவரை அனுப்ப எண்ணித் தாசில்தார் தாம் அலுவலகத்திற்கு ஆளை அனுப்பி அங்குக் கணக்கர் யாராவது இருந்தால் அவரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். தாசில்தார் அனுப்பிய ஆள் தாசில் தாரின் அலுவலகத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் முத்துசாமி ஐயரைத் தவிர வேறு ஒருவரையும் அவன் காணவில்லை. அவன் வந்தமைக்குரிய காரணத்தைஅறிந்த முத்துசாமி ஐயர் அவர்கள் தாமே தாசில்தார் அவர்கள் முன்னே போய் நின்றார். தாசில்தார் முத்துசாமி ஐயரைத் தாம் கருதிய இடத்திற்குப் போய் விவரங் களைப் பார்த்து வரச் சொன்னார். அவர் கட்டளைப் படியே முத்துசாமி ஐயர் அவர்கள், அவர் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று, உடைப்பைப் பற்றிய விவரங் களை அறிந்து கொண்டு அவற்றை ஒழுங்கு படுத்த என்னென்ன செய்யவேண்டும் என்பதையும், அதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்பதையும் பற்றித் திட்டம் ஒன்றைக் குறித்துக் கொண்டுவந்து, அதைத் தாசில்தாரிடம் கொடுத்தார். முதலில் அவர் குறிப்பைத் தாசில்தார் நம்பவில்லை; பின்னர், தம் தலை மைக் கணக்கர் வந்தவுடனே அவரிடம் இதைச் சொல்லி, அவரை உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குப் போய்ப் பார்த்துவருமாறு அனுப்பினார். தலைமைக் கணக்கர் உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குச் சென்று பார்த்து, முத்துசாமி ஐயரவர்கள் கூறியவை அனைத் தும் முறையானவை என்றும், அவற்றில் குறை ஒன்

றும் இல்லையென்றும் தாசில்தாரிடம் கூறினார். ஆகவே, தாசில்தார் ஐயரவர்களுடைய அறிவுக்காக அவரை மெச்சினார்.

மற்றொரு முறை பெரிய பணக்காரராகிய மிராசு தார் ஒருவர் தாசில்தாரை அணுகித் தாம் தம்முடைய நிலங்களுக்காகச் செலுத்த வேண்டிய வரிப் பணம் எவ் வளவென்று கேட்டார். அந்த மிராசுதாருக்கு அறு பது ஊர்களில் நிலங்கள் இருந்தன. தாசில்தார் தலை மைக் கணக்கரைக் கேட்காமல் எதையும் சொல்லக் கூடாத நிலையில் இருந்தார். ஆனால், முத்துசாமி ஐயரோ, அதைக் கண்டு, தாம் "சொல்லலாமா" என்று எண் ணிக் கொண்டிருந்தார். அப்போது தாசில்தார் முத்து சாமி ஐயரை நோக்கி, 'உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார். உடனே முத்துசாமி ஐயர் அவர்கள் அந்த மிராசுதார் செலுத்த வேண்டிய வரிப் பணத்தை அந்த நேரத்தில் கணக்குகளைப் பார்க்காமலே நினைத்துப் பார்த்து இவ்வளவு என்று சரியாகச் சொன்னார். அதைக் கேட்ட தாசில்தார் ஐயரவர்களின் புத்திக்கும், மறதி இன்மைக்கும் அவரை மெச்சிப் பாராட்டினார். பிறகு, கணக்கை எடுத்துப் பார்த்தபோது ஐயரவர்கள் சொல்லிய தொகையும், கணக்கில் காணப்பட்ட தொகை யும் சரியாய் இருந்தன!

அந்தக் காலத்தில் திருவாரூரில் சொக்கலிங்கம் என் னும் பெயரினைக் கொண்ட ஓர் உபாத்தியாயர் இருந் தார். அவர் அந்த ஊரிலேயே ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி நடத்திக் கொண்டிருந்தார். ஐயரவர்க ளுக்கு ஆங்கிலம் கற்றுக் கொள்ள வேண்டுமென்னும்

விருப்பம் அதிகமாய் இருந்தபடியால், அவர் தமக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் அந்தப் பள்ளிக் கூடத்திற்குச் சென்று வருவார். இவ்வாறாக அவர் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போய் ஆங்கில மொழி எழுத்துக்களை யெல்லாம் கற்றுக்கொண்டார்.

நாம் மேற்கூறிய தாசில்தாருக்கு ஒரு மருமகனுர் இருந்தார். அவரும் முத்துசாமி ஐயரும் ஏறக்குறைய ஒரே வயதினராய் இருந்தனர். இவ்விருவருக்கும் தாசில் தார் "இங்கிலீஷ்" முதல் புத்தகம் ஒன்றை வாங்கிக் கொடுத்து, அதைக் கற்பித்து வந்தார். சில தினங்களான பிறகு தாசில்தார் அப்புத்தகத்தை அவர்களே படித்து முடிக்க வேண்டுமென்று சொன்னுர். பிறகு சில நாட் கள் சென்றன. தாசில்தார் சிறுவர் இருவரையும் அழைத்து, 'எவ்வளவு தூரம் படித்து இருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அவருடைய மருமகனுர் புத்தகத்தில் ஒரு சில பாடங்களே படித்து முடித்திருக்க, முத்துசாமி ஐயர் அவர்கள் புத்தகம் முழுவதையுமே படித்து முடித் திருந்ததைக் கண்டார். இதனுலும் தாசில்தார் முத்து சாமி ஐயரவர்களிடத்தில் அன்பு கொண்டு, அவருக்குத் தம்மாலான உதவியைச் செய்து, அவரை முன்னுக்குக் கொண்டுவர முயன்ருர். ஆகவே, தாசில்தார் முத்து சாமி ஐயரவர்களை நாகபட்டினத்தில் இருக்கும் "வெஸ்லியன் மிஷன்" பாடசாலைக்கு அனுப்பினுர். அங்கே ஐயரவர்கள் பதினெட்டு மாத காலம் படித்தார்.

## 5. ஐயரவர்கள் சென்னை சேர்தல்

முத்துசாமி ஐயரவர்கள் நாகபட்டினத்தில் வெஸ்லியன் மிஷன் பள்ளிக்கூடத்தை விட்டு இப்போது

சென்னையில் மாகாணக் கல்லூரி என வழங்குவதும், அப்போது உயர்நிலைப் பள்ளியாக இருந்ததுமான கல்விச் சாலைக்கு வந்து, அதில் கல்வி கற்கலானார். அவர் சென்னைக்கு வந்தபோது "ராஜா சர் மாதவ ராவ்" அவர்களுக்கும், "சர் ஹென்றி மாண்ட் கோமரி" என்னும் துரை மகனருக்கும் அறிமுகக் கடிதங்கள் பெற்றுக் கொண்டு வந்து அவர்களைக் கண்டார்; அவர்களுடைய முயற்சியினால்தான் மாகாணக் கல்லூரியில் சேர்ந்து கற்கலானார். ராஜா சர் மாதவராவும், சர் ஹென்றி மாண்ட் கோமரி துரைமகனரும் முத்துசாமி ஐயர் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார்கள்.

முத்துசாமி ஐயர் படித்துக் கொண்டிருந்த உயர்நிலைப் பள்ளியில், அவர் படித்த போது, அதன் தலைவராயிருந்தவர் மிஸ்டர் பவல் என்னும் துரை மகனராவர். அவர், தென்னிந்தியாவில் கல்வி வளர்ச்சி பெறுவதற்காக அரும்பாடுபட்டு வந்தார். அவர் முத்துசாமி ஐயருடைய அறிவாற்றலைக் கண்டு, அவரிடத்தில் அதிக அன்பு பாராட்டி வந்தார். முத்துசாமி ஐயரும் தாம் அவ்வன்புக்குத் தகுதி உள்ளவராயிருக்கவேண்டுமெனக் கருதி மிகவும் நன்ருகப் படித்துத் தம் பள்ளித் தலைவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கி வந்தார். ஐயரவர்கள் உயர்நிலைப் பள்ளியில் இருந்தபோது ஆண்டு தோறும் பல வெகுமதிகளும், உதவிச் சம்பளமும் தவருமல் பெற்றுக்கொண்டு வந்தார்.

இளமை முதற்கொண்டே முத்துசாமி ஐயரவர்கள் கணக்கில் மிகவும் திறமை உள்ளவராய் இருந்தார். அவருக்கு வான நூலில் அதிகப்பற்று ஏற்பட்டிருந்தது.

அவ்வகையில் அவர் தம் முழுக் கருத்தையும் செலுத்தி வந்தார். "டிரிக்னுமெட்ரி" என்னும் கலையிலும் அவருக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருந்தது.

முத்துசாமி ஐயரிடத்தில் பவல் துரையவர்களுக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டு இருந்தது. ஆகவே, ஐயரவர்கள் துரைக்கு மிகவும் வேண்டிய மாணவராய் இருந்தார். பவல் துரை அவர்கள் முத்துசாமி ஐயரவர்களுக்கு வான நூல் பாடங்களைச் சிலபோது இரவு ஒன்பது மணிவரையில் கற்றுக் கொடுப்பார்; பிறகு ஐயரவர்களைத் தம் வண்டியிலேயே அழைத்துக்கொண்டு போய், மைலாப்பூரிலுள்ள ஐயரவர்களுடைய இல்லத்தில் சேர்த்துவிட்டுத் தமது இடத்திற்குச் செல்லுவார்.

முத்துசாமி ஐயரவர்கள் இவ்வாறுகத் தம்முடைய ஆசிரியர்களின் நன்மதிப்புக்கு உரியவராய்த் தம் கல்வியை மிகுதியும் வளர்த்து வந்தார். கல்வி இலாகா கழகத்தினர் 1854-ஆம் ஆண்டில், "தீய பழக்கங்களும் அவைகளை ஒழிக்கும் வழியும்," என்பதைக் குறித்து நல்ல கட்டுரை எழுதும் மாணவருக்கு ஐந்நூறு ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என்று விளம்பரப்படுத்தி இருந்தனர். அவ்வெகுமதியைப் பெற மாகாணத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் போட்டியிட்டார்கள். அவர்களில் ஒருவர் முத்துசாமி ஐயராவர். ஐயரவர்கள் எழுதிய கட்டுரை மற்றெல்லாக் கட்டுரைகளையும் தோற்கடிக்கக் கூடியதாய் இருந்தபடியால், ஐந்நூறு ரூபாய் வெகுமதி ஐயரவர்களுக்கே அளிக்கப்பட்டது. ஐயரவர்களுடைய கட்டுரையை நீதிபதி ஹாலோவே பார்க்கவாய்ப்பு நேர்ந்தது. அக்கட்டுரையின் மாண்பைக் கண்ட அந்

நீதிபதி ஐயரவர்களுடைய அறிவாற்றல்களைக் குறித்துச் சொல்லுகையில், 'ஐயரவர்களுடைய கட்டுரையில் உள்ள கருத்தைக் கடைப் பிடித்தால், எந்த நாட்டினரும் பெருமை அடையலாம்,' என்று கூறியுள்ளார்.

மேற்கூறிய கல்வி இலாக்கா கழகத்தின் செயலாளர்களாய் இருந்து வந்த சர் அர்பத்நட்டுத் துரையவர்களும், நீதிபதி ஹாலோவே அவர்களும் முத்துசாமி ஐயரவர்களைக் கொண்டாடினார்கள்.

முத்துசாமி ஐயர் அவர்களுக்கு ஐஞ்ஞூறு ரூபாய் வெகுமதி கொடுக்கப்பட்டது. அவருடைய பெயர் "கெஜட்"டில் வெளியிடப் பெற்று அவர் அரசாங்கத்தில் எந்த வேலையையும் செய்யத் தகுந்தவராவர் என்று குறிக்கப்பெற்றது. பவல் துரையவர்கள் ஐயரவர்களிடம் வெகுமதியைக் கொடுக்கும்போது பிற்காலத்தில் ஐயரவர்கள் பெறப்போகும் பெருத்த செல்வத்துக்கு அஃது ஆரம்பமாகுமென்று வாழ்த்திக் கொடுத்தார். அவர் வாழ்த்துக்கேற்ப, ஐயரவர்கள் உயர்தர அலுவல்களைப் பெற்று, அவைகளின் மூலமாகத் திரண்ட செல்வத்தைத் திரட்டிப் பெரும் பணக்காரரானார் என்பது இங்குக் கவனிக்கத் தக்கதே. ஐயரவர்கள் தாம் வெகுமதியாகப் பெற்ற ஐஞ்ஞூறு ரூபாயைச் செலவழிக்காமல், தம்முடைய இறுதிக்காலம் வரையில் வைத்திருந்தார்.

முத்துசாமி ஐயர் அவர்கள் எப்போதும் படித்துக் கொண்டிருப்பார். எனினும், அவருக்குச் சில நூல்களின் மீதுதான் மிகுதியும் பற்று ஏற்பட்டிருந்தது. ஆங்கில நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் நூல்களில் அவருக்கு விருப்பம் உண்டு. ஷேக்ஸ்பியருடைய நாட-

கங்களை அவர் பெரிதும் விரும்பிப்படித்து வந்தார். அவர் தம் நண்பர்களுடன் பேசும்போதும் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் குறித்துப் பேசி இன்புறுவார். சிறந்த ஆங்கில எழுத்தாளராகிய தாமஸ் கார்லைல் எழுதிய நூல்களையும் ஐயரவர்கள் படித்துவருவார். ஆனாலும், ஆங்கில நூலாசிரியர் ஆலிவர் கோல்ட்ஸ்மித் நூல்களில் தான் அவருக்கு அதிக மதிப்பு ஏற்பட்டிருந்தது. கோல்ட்ஸ்மித் என்பவரால் எழுதப் பெற்ற "விக்கார் ஆப் வேக்பீல்டு" என்ற நவீனத்தை ஐயர் தம் இறுதிக் காலத்திற்குள் ஐம்பது முறை படித்திருக்கிறார். தாம் இறக்கும்போது அவர் அந்த நூலை ஐம்பத்தோராவது முறையாகப் படித்துக்கொண்டிருந்தார் எனத்தெரிகிறது. இவ்வாறே ஒவ்வொரு கல்வியாளருக்கும் ஒவ்வொரு நூலாசிரியரிடத்தில் மதிப்பு ஏற்பட்டிருந்தது. உதாரணமாகப் பூண்டி அரங்கநாத முதலியாருக்கு ஏற்ற கவியாய் இருந்தவர் "ஷேக்ஸ்பியர்" என்றும், ராஜா சர் மாதவ ராவுக்கு ஏற்றவராயிருந்தவர் ஆங்கிலப் பேரறிஞர் கிப்பன் என்றும், சேஷைய சாஸ்திரியாருக்கு ஏற்றவராயிருந்தவர் நல்ல ஆங்கில நூலாசிரியர் அடிஸன் என்றும், ராவ்பகதூர் கோபால ராவுக்கு ஏற்றவராயிருந்தவர் ஷேக்ஸ்பியரும் ஆங்கில நாட்டு இளங் கவியாகிய ஷெல்லியும் என்றும் தெரிகின்றது.

## 6. ஐயரவர்கள் வேலையில் அமர்தல்

முத்துசாமி ஐயரவர்களுடைய சிறந்த அறிவாற்றல்களைக் கண்ட பவல் துரையவர்கள், அவரை ஐ. சி. எஸ். தேர்வுக்குப் படிக்க இங்கிலாந்துக்குப் போகச் சொன்னார். அப்போது ஐயரவர்கள் கலியாணஞ்

செய்து கொண்டவராய் இருந்தபடியாலும், குடும்பத்தைக் காப்பாற்றத் தம்மைத் தவிர வேறு ஒருவரும் இல்லாதபடியாலும், கடல் பிரயாணத்தில் அவருக்கு விருப்பமில்லாமல் இருந்தபடியாலும் இங்கிலாந்துக்குச் சென்று ஐ. சி. எஸ். தேர்வுக்குப் படிக்க அவர் விரும்பவில்லை.

ஐயரவர்கள் பி. ஏ. படித்த பிறகு மாகாணக் கல்லூரியிலேயே அறுபது ரூபாய் ஊதியத்தில் ஓர் ஆசிரியராய் நியமிக்கப் பெற்றார், இவ்வேலையை அவர் மிகவும் திறமையாகச் செய்து வந்தார். அதனாலும் தலைவர்களுக்கு அவரிடத்தில் அதிக அன்பு ஏற்பட்டது. இந்த வேலையில் ஐயரவர்கள் அதிக காலம் இருக்கவில்லை. அவர் "சர் ஹென்றி மாண்ட்கோமரி" என்னும் துரைமகனாருடைய உதவியினால் தஞ்சாவூர்க் கலெக்டர் அலுவலகத்தில் "ரிக்கார்டு கீப்பராக" நியமிக்கப் பெற்றார். இவ்வேலையை முத்துசாமி ஐயரவர்கள் திறமையாகச் செய்து தலைவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று, இதில் 1856-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையில் இருந்தார்.

அப்போது கல்வி இலாக்காத் தலைவராக இருந்தவர்* அலெக்ஸாண்டர் அர்பத் நட்டுத்துரை மகனாராவர். அவருக்கு ஐயரவர்களைக் குறித்து ஏற்கெனவே தெரிந்திருந்தபடியால், அவர் ஐயரவர்களை நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் பாடசாலைகளின் "உதவி இன்ஸ்பெக்ட"ராக நியமித்தார். ஐயரவர்கள் பாடசாலை உதவி இன்ஸ்பெக்டராய் இருந்த போது பல அரிய வேலை

*Director of Public Instruction

களைச் செய்தார். அதனால் அதிகாரிகளுக்கு அவரிடத்தில் அதிகப் பற்று ஏற்பட்டது. அவர் தம் திறமையினால் கல்வி இலாக்காவில் பல திருத்தம் செய்தார். இந்த வேலையை ஐயரவர்கள் பதினைந்து மாத காலம் வகித்து, தம் தலைவர்கள் புகழும்படி திறம்பட வேலைகளைச் செய்து வந்தார்.

அப்போது சென்னை அரசாங்கத்தார், "பிளீடர்ஸ் டெஸ்ட்" தேர்வு என்னும் வக்கீல் தேர்வை ஏற்படுத்தி, அதில் தேறுகிறவர்கள் ஜில்லாக் கோர்ட்டுகளிலும், பிற கோர்ட்டுகளிலும் வழக்குகளை விவாதிக்கலாமென்று விளம்பரப்படுத்தி இருந்தனர். அத்தேர்வில் கலந்து கொள்ளப் பலர் முன் வந்தனர். அவர்களில் முத்துசாமி ஐயரும் இரகுநாத ராயரும் இருந்தனர். தேர்வு சென்னை மாகாணத்தின் பற்பல இடங்களில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அவ்வாறு ஏற்படுத்தப் பெற்ற இடங்களில் கும்பகோணமும் ஒன்றாகும். கும்பகோணத்தில் அப்போது பீச்சம் துரை என்பவரொருவர் நீதிபதியாய் இருந்தார். அவருடைய மேற்பார்வையிலே தான் கும்பகோணத்தில் நாம் மேற்கூறிய வக்கீல் தேர்வு 1856–ஆம் ஆண்டு பிப்ரவரி *மாதம் நடைபெற்றது. அந்தத் தேர்வுக்கு எழுத வருகிறவர்களுக்கு ஒரு வழக்கைப் பற்றிய செய்திகள் யாவும் விளக்கமாகச் சொல்லப்படும். அந்தச் செய்திகளை ஆராய்ந்து அவ் வழக்கைப் பற்றித் தீர்ப்பு எழுத வேண்டும். அதற்கு இணங்கித் தேர்வுக்கு எல்லோரும் உட்கார்ந்தனர். கும்பகோணம் "சிராஸ்தாதார்" ஒரு வழக்கைப் பற்றிய

*Pleaders Text Examination.

செய்திகளைத்தேர்வு எழுத வந்தவர்களுக்கு மிகவும் விரைவாகச்சொல்லிக்கொண்டுபோனர். பலரால் அவர் சொல்லிக் கொண்டு போன செய்தியைப் பின்பற்ற முடியவில்லை. ஆகவே, முத்துசாமி ஐயருக்கும் அந்தச்சிரஸ்தாதாரருக்கும் கொஞ்சம் பேச்சு ஏற்பட்டது. ஏற்படவே பீச்சம் துரை அவ்விடத்திற்கு வந்து எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தினர். பிறகு தேர்வில் கலந்து கொண்டவர்களால் தனித்தனித் தீர்ப்பு எழுதப் பெற்றது. அவ்வாறு எழுதப் பெற்ற தீர்ப்புகளில் பீச்சம் துரை எழுதி வைத்திருந்த தீர்ப்பும், முத்துசாமி ஐயரவர்களுடைய தீர்ப்பும் ஒரேவிதமாயிருந்தன. ஆகவே, பீச்சம் துரையவர்களுக்கு முத்துசாமி ஐயரவர்களிடத்தில் மிகுதியான மதிப்பு ஏற்பட்டது. தேர்வில் முத்துசாமி ஐயரவர்கள் முதல்வராகவும், இரகுநாத ராயர் இரண்டாமவராகவும் தேறினர்கள்.

அரசியலார், முத்துசாமி ஐயரவர்களைத் தரங்கம்பாடியில் "ஜில்லா முனிசிப்"பாக நியமித்தார்கள். இந்தப் பதவியை அவர் திறம்பட வகித்து, எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ருர். ஜில்லா நீதிபதியான பீச்சம் துரையவர்கள், முத்துசாமி ஐயரவர்களுடைய வேலைத் திறனைத் தாமே நேரில் கண்டுகளிக்கக் கருதி, ஒரு நாள் திடீரென்று தரங்கம்பாடிக்குச் சென்ருர். ஐயரவர்களோ, சில முனிசிப்புகளைப் போலப் பெரிய நீதிபதிகளைக் கண்டவுடன் நடுங்கும் குணமுடையவரல்லர். அவர் அஞ்சாமையைத் தமக்குரிய அணியாகக் கொண்டவர். ஆகவே, அவர் பீச்சம் துரை அவர்களை வரவேற்றுத் தம்மிடம் இருந்து தாம் நடத்தும்

வழக்கைக் கவனித்துத் தமக்கு ஊக்கம் அளிக்கவேண்டு மென்று சொல்லி, அவரைத் தம் பக்கத்திலேயே அமரச் செய்து, தாம் எப்போதும் போல வழக்கை நடத்த ஆரம்பித்தார். பீச்சம் துரையவர்களும் ஐயரவர்களு டைய அவ்வேண்டுகோளுக்கு இணங்கி, வழக்கைக் கவனித்துக் கொண்டு வந்தார். பின்னர்ப் பீச்சம் துரை யவர்கள் ஐயரவர்களுடைய திறமையைப்பற்றிப் புகழ்ந் துரைத்ததோடு, ஐயரவர்கள் தம்முடன் உட்கார்ந்து வழக்குகளை விசாரிப்பதற்கேற்ற திறமையைக் கொண் டவராவர் என்றும் கூறினர்.

இனம்தார்களைப் பற்றிய செய்திகளை ஒழுங்குபடுத்த அரசாங்கத்தார் "இனம் கமிஷன்" என்ற ஒரு கமிஷனை ஏற்படுத்தி, அதன் சார்பில் சிலரை "டெபுடி கலெக் டர்"களாக நியமித்தனர். அவ்வாறு நியமிக்கப் பெற்ற வர்களில் நம் ஐயரவர்களும் ஒருவராவர். முதலில் அர சாங்கத்தார் ஐயரவர்களைத் தஞ்சாவூர் டெபுடி கலெக் டராக நியமித்தனர். இவ்வேலையையும் அவர் திறம் படவே பார்த்து வந்து, அதிகாரிகளுடைய கருணைக்குப் பாத்திரமானர். பின்னர், அதிகாரிகள் அவருக்கு மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய உரிமையையும் கொடுத்து, முறையே தென்னர்க்காட்டிலும், தஞ்சாவூரிலும் டெபுடி கலெக்டராக நியமித்தார்கள். ஐயரவர்கள் டெபுடி கலெக்டர் பதவியை மூன்று ஆண்டு காலம் பலரும் மெச்சும்படி பார்த்து வந்தார்.

இவ்வாறு ஐயரவர்கள் மாஜிஸ்ட்ரேட் அதிகாரத் துடன் கூடிய டெபுடி கலெக்டராகத் தஞ்சாவூரில் இருந்தபோது ஒரு பெரிய பணக்காரர்மீது நம்பிக்கைத்

துரோக வழக்கு ஒன்று ஏற்பட்டு, அஃது ஐயரவர்கள் முன் விசாரணைக்கு வந்தது. பணக்காரர் பக்கமாகப் பேர்பெற்ற "பாரிஸ்டர் ஜான் புரூஸ் நார்ட்டன்" தோன்றி, வழக்கை நடத்தினர். நார்ட்டன் அவர்கள் அவ்வழக்கின்போது ஐயரவர்களுடைய அறிவாற்றல் களைக் கண்டு மிகவும் மெச்சினர். அவர் சென்னைக்குத் திரும்பி வந்ததும், தம் நண்பர்களான நீதிபதி ஹாலோவே அவர்களையும், அர்பத் நட்டுத் துரையவர் களையும் கண்டு, அவர்களிடத்தில் முத்துசாமி ஐயரு டைய திறமையைப் பற்றிப் புகழ்ந்துபேசி, "ஐயரின் உயர்ந்த நீதிபதிகளுக்குரிய திறமை யாவும் அவர் ரெவி னியூ இலாக்காவில் இருப்பதால் பாழடைகின்றன" என்ருர்.

## 7. நீதிபதியாதல்

அரசியலார் முத்துசாமி ஐயரவர்களை 1865–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தென்கன்னடம் மாவட்டத் தில் உதவி நீதிபதியாக நியமித்தார்கள். இந்தப் பத வியை ஐயரவர்களுக்குக் கொடுப்பதற்கு முன் அரசாங் கத்தினர், அப்பதவிக்குத் தகுதியுள்ள மூவருடைய பெயர்களைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி நீதிபதி ஹாலோவே என்பவரைக் கேட்டனர். அதற்கிணங்கிய நீதிபதி ஹாலோவே அவர்கள், வெவ்வேறு மூன்று பெயர் களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, ஐயரவர்களுடைய பெயரையே முத்துசாமி ஐயர், முத்துசாமி ஐயர், முத்து சாமி ஐயர் என்று மூன்றுதரம் குறிப்பிட்டு அரசாங்கத்தா ருக்கு அனுப்பினர். இதனாலும், நீதிபதி ஹாலோவே அவர்கள் ஐயரவர்களிடத்தில் எத்தகைய மதிப்புக்

கொண்டிருந்தார் என்பது தெள்ளிதில் விளங்குகிற தல்லவா? பிறகு தென்கன்னடம் மாவட்ட நீதிபதி வேலை ஐயருக்குக் கிடைத்தது, இவ்வேலையை ஐயரவர் கள் ஏற்று எல்லோரும் மெச்சும் வண்ணம் நடந்து கொண்டார்.

ஐயரவர்கள் தென் கன்னடத்தைச் சேர்ந்த மங்களூரில் நீதிபதியாய் இருக்கையில் 1868–ஆம் ஆண்டு சென்னையில் "மாஜிஸ்ட்ரேட்டு" வேலை காலியாயிற்று. "அவ்வேலைக்கு யாரை நியமிக்கலாம்" என்று அரசாங்கத் தினர் கருதிக் கடைசியில் அவ் வேலைக்கு முத்துசாமி ஐயரவர்களே பலவிதத்திலும் தகுதியானவர் என்று தீர்மானித்து, அவருக்கே அவ்வேலையைக் கொடுத்து, அவரை மேன்மைப் படுத்தினர். ஐயரவர்கள் அந்தப் பதவியை வகித்துப் பிறருடைய போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் அஞ்சாமல், செயலாற்றி வந்தார். அதை அறிந்த மேலதிகாரிகளும் நாட்டு மக்களும் அவ ரைக் கொண்டாடினர்கள். அவர், தம் கடமையை நடு நிலைமையுடன் செய்துவந்தார். ஐயரவர்களுடைய அஞ் சாமையும், நடுநிலைமைத் தன்மையும் செவ்வையாய் விளங்குவதற்குரிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது, அதைச் சிறிது நோக்குவோம்.

சென்னை உயர்தர நீதி மன்றத்து நீதிபதி ஒருவரு டைய தோட்டத்தில் நுழைந்த குற்றத்திற்காக ஓர் இந் தியரை அந்த நீதிபதி நையப் புடைத்துவிட்டார். அந்த இந்தியர், தம்மை அடித்துத் துன்புறுத்தியதற்காக அந்த நீதிபதியின்மீது வழக்குத் தொடரச் "சம்மன்ஸ்" அளிக் கப்பட வேண்டுமென்று ஐயரவர்களிடம் முறை

யிட்டுக்கொண்டார். ஐயரவர்கள் எதற்கும் அஞ்சா தவரானபடியால், நியாயம் வழங்குதல் ஒன்றையே சிறப்பாகக் கருதிக் குற்றவாளி உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதியாய் இருந்தாலும் குற்றவாளியே ஆவாரென்று நினைத்து அந்த நீதிபதிக்குச் சம்மன்ஸ் பிறப்பித்தார். பிறகு முத்துசாமி ஐயரவர்களுக்கு மேலிருந்த மாகாணத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு ஐயரவர்களை அணுகிக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவர் உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதி என்றும், அவரை வழக்கின்போது நேரில் வரவேண்டுமென்று கட்டாயப் படுத்த வேண்டியதில்லை என்றும் சொன்னார். ஆனால், முத்துசாமி ஐயரவர்கள் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவர் உயர்தர நீதிபதி வழக்கின்போது நேரில் வர வேண்டுமென்று வற்புறுத்தினார். அந்த நீதிபதியும் அதற்கிணங்கி நேரில் வந்தார். வழக்கு நடந்தது. நீதிபதி குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, அவருக்கு மூன்று ரூபாய் ஐயரவர்களால் தண்டம் விதிக்கப்பட்டது. இத்தகைய நேர்மையாளர்களே எப்பொழுதும் சிறைப்படைவார்கள்.

முத்துசாமி ஐயரவர்கள் சென்னையில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது ஜர்மன் மொழியை நன்கு பயின்று, சட்ட சம்பந்தமான அநேக நுண்ணிய கருத்துக்களை அறிந்துகொண்டார். இவ்வகையில் நீதிபதி ஹாலோவே அவர்கள் முத்துசாமி ஐயரவர்களுக்குப் பெரிதும் துணைபுரிந்து வந்தார். சட்டக் கலையின் ஒரு பகுதியான அரசாட்சி முறையின் அடிப்படையான கொள்கைகளை எல்லாம் ஐயரவர்கள் ஐயமறக் கற்று

ணர்ந்திருந்தார். அஃது அவருக்குப் பிற்காலத்தில் பெருந் துணையாய் இருந்தது. நீதிபதி ஹாலோவே அவர்கள் அடிக்கடி ஐயரவர்களிடம் சில வழக்குகளைக் கொடுத்துத் தீர்ப்பு எழுதித் தமக்குக் காட்டச் சொல்வது வழக்கம். அவர் கருத்துப்படி ஐயரவர்கள் அவ்வழக்குகளைச் சட்ட முறைப்படி ஆராய்வார்; பிறகு அவைகளுக்குத் தீர்ப்பு எழுதி, அத்தீர்ப்புகளை நீதிபதி ஹாலோவே அவர்களுக்குக் காட்டுவார். நீதிபதி ஹாலோவே அவர்கள் அவைகளைப் பார்வையிட்டு, ஐயரவர்களுடைய புத்தியை மெச்சுவார். இவ்வாறு ஐயரவர்கள் சட்டத்தின் அடிப்படையான எண்ணங்களை எல்லாம் நீதிபதி ஹாலோவேயிடமிருந்து கற்றுக்கொண்டனர்.

ஐயரவர்கள் சென்னையில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்துகொண்டே பி. எல். தேர்வுக்குப் படித்து, அதில் முதல்வராகத் தேறினர்.

பின்னர் அரசாங்கத்தினர் ஐயரவர்களைச் சென்னை "ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜாக" நியமித்தனர். அவ்வேலையை ஏற்று ஐயரவர்கள் பலரும் புகழும் வண்ணம் அலுவல்களைச் செய்துவந்தார். முத்துசாமி ஐயரவர்கள் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு நீதிபதியாய் இருக்கையில் தம்மிடம் வந்த வழக்குகளில் நடந்துகொண்ட மாதிரி அவரது ஒழுக்கத்தின் மேன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஐயரவர்களுக்கு இளமையில் நண்பராயிருந்த ஒருவர் மற்றொருவரிடம் இருநூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தார். அவர் அதைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

ஆகவே, கடன் கொடுத்தவர் முத்துசாமி ஐயரவர்களுடைய நண்பர்மீது தமக்குச் சேரவேண்டிய தொகைக்காக முத்துசாமி ஐயருடைய மன்றத்திலேயே வழக்குத் தொடுத்தார். வழக்கு நடைபெறுவதற்கு முன்னர் ஐயரவர்களுடைய நண்பர் ஐயரவர்களைக்கண்டு அவரிடம் தாம் பணம் கொடுக்காமல் இருப்பதற்கான வழியைத்தேடச் சொன்னர். ஐயரவர்கள் அவர் கூறியவைகளை நிதானமாகக் கேட்டுக் கொண்டார். ஆனல் இவ்வகையில் நியாயத்திற்கு விரோதமாக நடந்து தம் நண்பரைக் காப்பாற்ற வேண்டுமென்று ஐயரவர்கள் கருதவில்லை. அவர் நியாயப்படியே நடக்கக் கருதினர்,

பிறகு ஐயரவர்கள் நண்பரின் வழக்கு ஐயரவர்களிடம் விசாரணைக்கு வந்தது. ஐயரவர்கள் அந்த வழக்கை முன் பின் தெரியாதவர்களுடைய வழக்கை நடத்துவதுபோலவே சட்டப்படி நடத்தினர்; பிறகு தம் நண்பர் குற்றமுள்ளவர் எனக் கண்டார். ஆகவே, அவர் சிறிதும் விட்டுக் கொடாமல், சட்டத்திற்கு அடங்கித் தம் நண்பருக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்தார். அத்தீர்ப்பின்படி அவர் நண்பர் வாதிக்கு இருநூறு ரூபாய் கொடுக்க வேண்டியவரானர். வாதி தன் பணத்தைப் பெற "வாரண்டு" பிறப்பிக்கவேண்டுமென்று ஐயரவர்களிடம் கேட்டுக்கொண்டார். நியாய வழியிலேயே நடக்க வேண்டும் என்னும் எண்ணம் உள்ள ஐயரவர்கள் அக்காரியத்தையும் தம் நண்பருக்கு விரோதமாகச் சட்டப்படி செய்து முடித்தார்.

ஐயரவர்களுக்குத் தம் நண்பர் பரம ஏழை என்பதும், அவரால் இருநூறு ரூபாய் கட்ட முடியாதென்

பதும், கட்ட முடியாவிட்டால் அவர் சிறை புகுவாரென் பதும் தெரியும். ஆகவே, அவர் தம் நண்பருக்காகத் தாமே வாதிக்கு இருநூறு ரூபாயைக் கொடுத்து வாரண்டை நீக்கித் தம் நண்பரைக் காப்பாற்றினர். இத்தகைய பெருங்குணமுள்ள மக்களே என்றைக்கும் புகழப்படுவார்கள்.

ஐயரவர்கள் இவ்வாறு இருந்தபோது சென்னையில் கவர்னராயிருந்த லார்டு ஹோபார்டு என்பார் ஐயரவர்களின் அறிவுக்காக அவரை மெச்சி, அவரைக் கடப்பை மாவட்ட நீதிபதியாக நியமிக்க எண்ணம் கொண்டார். ஆனால், சிலர் இந்த ஏற்பாட்டை ஆதரிக்காமற் போகவே, ஐயரவர்களுக்கு அப்போது அந்த நீதிபதி வேலை கிடைக்கவில்லை.

விக்டோரியா மகாராணியார் 1877-ஆம் ஆண்டில் இந்தியாவின் சக்கரவர்த்தினியார் ஆனர். அந்த வைபவத்தைக் கொண்டாடக் கவர்னர் ஜெனரல் டில்லி நகரத்தில் ஒரு 'தர்பார்' நடத்தினர். அந்தத் தர்பாருக்கு அரசாங்கத்தினர் ஐயரவர்களையும் அழைத்தனர். அவ்வழைப்புக்கு இணங்கி ஐயரவர்கள் டில்லிக்குச் சென்றார். அப்போது அவர் பெருமையை உணர்ந்து, கவர்னர் ஜெனரல் அவருக்கு ஒரு பொற் பதக்கம் பரிசளித்தார். இவ்வாறு ஐயரவர்கள் பாராட்டப் பெற்றமை மகிழத் தக்கதே.

அரசாங்கத்தினர் ஐயரவர்களுடைய வேலைகளை மெச்சி, 1878-ஆம் ஆண்டில் ஸி. ஐ. இ., என்ற பட்டத்தை அளித்து, அவரை மேன்மைப் படுத்தினர். அப்

பட்டச் சம்பந்தமான சன்னத்தைக் கவர்னராயிருந்த பக்கிங்காம் பிரபு என்பவர் ஐயர் அவர்களுக்குக் கொடுக்கையில் ஐயரவர்கள் குணப் பெருமையையும், வேலைத் திறமையையும் மிகப் புகழ்ந்து பேசினர்.

முத்துசாமி ஐயரவர்கள் சிறிது காலம் மதுரை ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜாகவும் வேலை பார்த்து வந்தார். பிறகு அரசாங்கத்தினர் அவரைச் சென்னை உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவராக நியமித்தனர். சென்னை மாகாணத்தில் இப்பதவியைப் பெற்ற முதல் இந்தியர் ஐயரவர்களேயாவர். ஐயரவர்கள், 1878-ஆம் ஆண்டு சென்னை உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டபோதிருந்த சென்னைக் கவர்னர், ஐயரவர்களை மிகப் புகழ்ந்து, அவரைப் பின்பற்றி மற்றவர்களும் நடக்க வேண்டுமென்றும், அவர் மற்றவர்களுக்கு வழி காட்டியாயிருக்கிருரென்றும், அவர் அறிவாற்றல்களினுலும் நிருவாகத் திறமையினுலுமே இத்தகைய உயர் பதவியை அடைந்தாரென்றும் கூறினர்.

ஐயர் அவர்கள் சென்னை உயர்தர நீதிமன்றத்து நீதிபதியானதும் அவரிடம் விசாரணைக்கு வந்த முதல் வழக்கு மிகவும் கடினமானதாகும் என்றுலும், ஐயரவர்கள் தம்முடைய திறமையினுல் அவ்வழக்கைத் தம்முடன் இருந்த நீதிபதிகள் மெச்சும் வண்ணம் நடத்திக் காட்டினர்.

முதல் இரண்டொரு வழக்குகளிலேயே ஐயரவர்கள் சிறந்த நீதிபதி என்று பேர் பெற்றுர். அவர் உயர்தரச் சட்ட ஞானத்தில் தேர்ச்சி பெற்றிருந்தபடி

யால், அவர் அதைத் துணையாகக் கொண்டு, தமக்கு நீதிபதி ஹாலோவே கூறியபடி வழக்குகளைச் சட்ட ஒழுங்குக்கு முரணாகாதவாறு நடத்திப் பெரும் புகழடைந்தார். கடினமான வழக்குகளாயிருந்தால், அவைகளை மற்ற நீதிபதிகள் பெரும்பாலும் முத்துசாமி ஐயரவர்களுக்கே விட்டு விடுவார்கள். அத்தகைய வழக்குகளையெல்லாம் ஐயர் தம் தோழர்கள் மெச்சும் வண்ணம் தீர்த்து வைப்பார். அவர் கோர்ட்டில் வழக்குகளை நடத்தும் போது பொறுமையையே ஆபரணமாகக் கொண்டு விளங்குவார். அவர் பதினைந்து ஆண்டுக்கு மேலாகவே நீதிபதியாயிருந்தார்.

சென்னை உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாயிருந்த சர் ஆர்தர் காலின்ஸ் என்பார் விடுமுறை பெற்றுக் கொண்டு இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். அப்போது ஐயரவர்கள் அவருக்குப் பிரதிநிதியாக முதல் நீதிபதியாய், சிறிது காலம், வேலை பார்த்து வந்தார். பின்னர் அரசாங்கத்தினர் அவருடைய வேலையை மெச்சி அவருக்கு "சர்" என்ற பட்டத்தை அளித்தனர். அது முதற்கொண்டு முத்துசாமி ஐயரவர்கள் 'சர். தி. முத்துசாமி ஐயர்' என்று பல்லோராலும் சொல்லப்பட்டு வந்தார்.

இவ்வாறு இருக்கையில் வேலை மிகுதி காரணமாகத் திடீரென்று ஐயரவர்களின் உடல் பலவீனம் அடையலாயிற்று. எவ்வளவோ சிகிச்சை செய்தும் குணம் உண்டாகவில்லை. அது காரணமாகவே ஐயரவர்கள், கற்றோரும் மற்றோரும் வருந்த, 1895-ஆம் ஆண்டு ஜனவரி

மாதம் 25-ஆந்தேதி இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்தார்.

ஐயரவர்களுடைய மரணத்தைக் குறித்து வருந்தாதவர் ஒருவரும் இலர். சென்னை அரசாங்கத்தினர் ஐயரவர்கள் மரணத்தைப் பற்றித் தங்கள் வருத்தத்தைப் "போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டின்" மூலம் உலகுக்கு அறிவித்தனர்.

## 8. ஐயரவர்களுடைய குணாதிசயங்கள்

ஐயரவர்கள் பொறுமையையே ஆபரணமாகக் கொண்டு விளங்கினார். அவர் சிறுவராயிருந்த காலத்தில் பலர் அவருடைய கல்வி வளர்ச்சியைக் குறித்து வியந்து பேசுவதுண்டு. அவர் எப்போதும் மகிழ்ச்சியுடனிருப்பார். அவர் ஆடம்பரத்தை வெறுத்து எளிய வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார். அவர் ஒரு முறை டில்லிக்குச் சென்றிருந்தபோது சர் சையத் ஆமது என்ற முகம்மதியப் பெரியாரைக் காண விரும்பினார். ஆனால், அவரால் உடனே அப்பெரியாரைக் காண முடியவில்லை. முத்துசாமி ஐயரவர்கள் சாதாரண மனிதனைப் போல உடை உடுத்து இருந்ததைக் கண்ட அந்த நவாப்பின் வேலையாட்கள் அவரை யாரோ ஓர் எளியவர் என்று கருதி, நெடுநேரம் வரையில் வீணாகக் காத்திருக்கச் செய்தனர். கடைசியில் சர் சையத் ஆமது முத்துசாமி ஐயருடைய வருகையைக் கேள்வியுற்று, அவரைத் தக்கபடி வரவேற்றுப் பாராட்டித் தம் வேலைக்காரர்களின் அறியாமைக்காகத் தம்மை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார். உலகத்தில் பெரும்பாலும் மக்கள் ஆடம்

பரத்தையே மதிக்கிறார்கள் என்பது இதனால் காணக் கிடக்கின்றது.

ஐயரவர்கள் எப்போதும் யாருக்கும் தீமை செய்ததே இல்லை. அவர் எளிய வாழ்க்கையுடன் மேலான எண்ணங்களைக் கொண்டு விளங்கினார். அவர் தமக்குள்ள அறிவாற்றல்களைக் கருதியாவது, பெரிய நிலையை எண்ணியாவது செருக்குக் கொண்டதே இல்லை. அவர் எல்லோரையும் தமது தூயகுணத்தினால் தம்மிடம் இழுக்கும் தன்மை உள்ளவராயிருந்தார். அவருடைய பொறுமை, அடக்கம், பெரியோருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் ஆகிய இக்குணங்களை ஐரோப்பியர்களும் பாராட்டிப் பேசி இருக்கிறார்கள். அவர் தம் நண்பர்களைப் பெரிதும் கொண்டாடுவார். உறவினர்களிடத்தும் அவர் மிகுதியும் பற்று உள்ளவர்.

அவர் செருப்பு அணிந்து கொள்ளுவதில்லை. அவர் தம் பட்டு அங்கிக்குள் "அல்பாக்கா" சட்டை ஒன்றைப் போட்டுக் கொண்டிருப்பார்; சரிகைத் தலைப்பாகை அணிந்திருப்பார். அவர் நெற்றியின் இடையில் சந்தனப் பொட்டு திகழ்ந்துகொண்டிருக்கும். அவர் கழுத்துப் பட்டை அணியவில்லை, அவர் நீதிபதிகளுக்குரிய "டை" ஒன்றை வேண்டும்போது மட்டும் அணிந்து கொள்வார். வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஐயரவர்கள் ஒரு கண்ணை மூடிக்கொண்டும், இறகு பேனாவை முகத்துக் கருகில் வைத்துக் கொண்டும், சிரித்துக்கொண்டும், வக்கீல்கள் கூறும் நியாயங்களைக் கவனித்துக்கொண்டும் இருப்பார். ஐயரவர்கள் தமது வலக்

காலின் கட்டை விரலைப் பக்கத்து விரலுடன் அழுத்தி ஞல், வக்கீல்கள் "இனிமேல் தாங்கள் பேசுவதில் பயனில்லை" யென்றும், தங்கள் வழக்குத் தோற்றுப்போய் விட்டதென்றும் கண்டுகொள்வார்கள். ஏழை, பணக்காரர், உயர்ந்த நிலையுள்ளவர், தாழ்ந்த நிலையினேர் என்று கருதாமல், அவர் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி நடந்துகொண்டார். அவர் மற்ற நீதிபதிகளிடம் அன்புடன் நடந்து வந்தார். இரக்கம், உதவி செய்தல் முதலிய குணங்களை அவர் கொண்டிருந்தார்.

அவர் 'கிரிமினல்' வழக்குகளில் தூக்குத் தண்டனை விதிப்பதில்லை. "செஷன்ஸ் ஜட்ஜு"களால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள் மீண்டும் ஆலோசிப்பதற்காக அவரிடம் வந்தால், அவர் அவைகளை உறுதிப்படுத்தாமல், தூக்குத் தண்டனையை வேறு விதமாக மாற்றிவிடுவார். 'இறைவனுல் படைக்கப்பட்ட ஓர் உயிரை ஒரு மனிதன் தன் சிற்றறிவால் போக்கத் தகுதியுள்ளவன் அல்லன்' என்பதே அவர் முடிந்த கருத்தாகும். இக்காரணத்தினுல் தூக்குத் தண்டனை விதிக்கவோ, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளை உறுதிப்படுத்தவோ அவர் இணங்குவதில்லை. இவ்வாறு முத்துசாமி ஐயரைப்போல் எண்ணிய இன்னும் சில இந்திய நீதிபதிகளும் இருந்தார்கள். காலஞ்சென்ற சர். டி. சதாசிவ ஐயர் அவர்களும் தாம் சென்னை உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதியாயிருந்தபோது தூக்குத் தண்டனை விதிக்க விரும்புவதில்லை என்றும், தூக்குத் தண்டனை கட்டாயமாக விதிக்க வேண்டிய வழக்காயிருந்தால், அவ்வழக்கைத் தமக்குக் கொடுக்க வேண்டா

மென்று தலைமை நீதிபதியைக் கேட்டுக்கொள்வது உண்டென்றும் தெரிகிறது.

## 9. முத்துசாமி ஐயரும் நியாய 'இலாக்கா'வும்

முத்துசாமி ஐயரவர்கள் நியாய இலாக்காவுக்கே ஓர் அணிகலனாக விளங்கினார். அவரை ஒரு சிறந்த நீதிபதியென்று இந்தியர்கள் மாத்திரமல்லாமல், ஐரோப்பியர்களும் கொண்டாடி இருக்கிறார்கள். "இந்திய நீதிபதிகளில் முத்துசாமி ஐயரவர்களுடைய தீர்ப்புகளும், முகம்மதிய நீதிபதிகளில் சையத் மாமூது அவர்களுடைய தீர்ப்புகளும் பெரிதும் பயன்தரத் தக்கவைகளாகும்," என ஒரு பெரிய அறிஞர் கூறியிருக்கின்றார். முத்துசாமி ஐயருடன் இருந்த நீதிபதிகளும் அவருடைய தீர்ப்புகளைப் புகழ்ந்துரைத்திருக்கிறார்கள். நீதிபதி "ஹட்கின்ஸ்" என்பார், 'முத்துசாமி ஐயருடன் இருந்து வழக்குகளை விசாரிப்பது மகிழ்ச்சியைத் தரத் தக்க காரியமாகும்,' என்று கூறுகிறார். தம்முடன் உட்காரும் நீதிபதி, நடைபெறும் வழக்கைப்பற்றி, விரைவாக ஒரு முடிவுக்கு வருவதாகத் தோன்றினால், ஐயரவர்கள் பிறர் அறியாவண்ணம் அவருக்கு அவ்வாறு செய்ய வேண்டாமென்று சைகை செய்வார். இச்சைகையை அந்நீதிபதி அறிந்து, பொறுமையாய் இருப்பார். இதனால், ஐயரவர்களிடத்தில் மற்ற நீதிபதிகளுக்கு மிகவும் மதிப்பு ஏற்பட்டிருந்ததென்பது தெரிகிறது அல்லவா?

ஐயரவர்கள் தம் தீர்ப்புகளை எல்லோருக்கும் விளங்கும்படி சொல்லுவார். **இந்து லாவில்** அவர் மிகவும் கீர்த்தி அடைந்திருந்தார். அவர் வக்கீல்கள் எடுத்துக் காட்டும் மேற்கோள்களை அப்படியே நம்பிவிடுவது இல்லை. தம் சொந்த அறிவைக்கொண்டு அவைகளை ஆராய்வது அவர் வழக்கம். சட்ட சம்பந்தமான கொள்கைகளில் அவர் பெரிதும் பாண்டித்தியம் அடைந்திருந்தார். அவர் தம் தீர்ப்புகளை எல்லாம் சட்டத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டே கூறிவந்தார். அவரது மறவாத்தன்மை பெரிதும் மெச்சத் தக்கது. அவருக்குச் சிறு வயது முதற்கொண்டே எதையும் மறவாமல் மனத்தில் வைத்துக் கொள்ளும் திறமை இருந்தது. அதைக் கண்டு அவருடைய ஆசிரியர்களும் நண்பர்களும் அவரைப் பெரிதும் கொண்டாடி வந்தார்கள். அவர் வழக்குகளைச் செவ்வையாக ஆராய்ச்சி செய்வதோடு அவைகளைப் பற்றிய செய்திகளைக் கேள்விகளாலும் விடைகளாலும் விவரித்து அவை தமக்கும் வக்கீல்களுக்கும் தெளிவாகும்படியும் செய்வார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவர் தம் எதிரில் வாதிக்கும் நியாயவாதியை வழக்கைப்பற்றிய பலகேள்விகள் அடுக்கடுக்காகக் கேட்டு, வழக்கின் அடிப்படையை விவரமாகத் தெரிந்து கொள்வார். இதனுல் அவருக்கும், நியாய வாதிகளுக்கும் வழக்கில் அதிக காலக் கழிவு ஏற்படுவதில்லை. ஐயரவர்கள் தீர்ப்பு எழுதுவதில் மிகவும் வல்லவராவர். அவர், சில வழக்குகளில் எழுதிய தீர்ப்புகள் இன்றைக்கும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டு வருகின்றன. எந்தச் செய்தியையும் அவர் சுருங்கக்கூறி விளங்க வைப்

பார். அவர் "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்!" என்ற பிடிவாதக் கொள்கையை உடையவர் அல்லர். தாம் கொண்ட கருத்து சரியன்று என்பதற்குப் போது மான ஆதாரங்கள் காட்டப்பட்டால், உடனே அவர் தமது கருத்தை மாற்றிக் கொள்ளுவார்.

ஐயரவர்கள் சட்டத்தை மாத்திரம் அறிந்து இருப் பதால் நன்மை உண்டாகாதென்றும், சட்டத்திற்குரிய அடிப்படையான காரணத்தை அறியாதவன் சட்டம் பயின்றதனுல் நன்மை அடையமாட்டான் என்றும் கூறியிருக்கின்ருர். சட்டத்தை முறைப்படி பயில்வது பொது மக்களின் தத்துவங்களை அறிந்து கொள்ளுவ தாகுமென்று அவர் கூறியிருக்கின்ருர். வக்கீல் தொழில் மக்களுடைய நன்மைகளைப் பாதுகாப்பதாயிருப்பதால். அது மிக உயர்ந்த தொழிலாகுமென்றும், ஆகவே வக் கீல்கள் ஆராயாமல் எத்தகைய காரியத்தையும் செய்யக் கூடாதென்றும், உண்மையை ஆராய்ந்தறிய வேண்டு மென்னும் நோக்கம் அவர்களுக்கு இருக்க வேண்டு மென்றும் கூறியுள்ளார். மேலும் அவர் 'வக்கீல்களு டைய வாக்குத் திறமையினுல் மயங்கியும் அவர்கள் செய்திகளைப் பரிதாபந்தோன்ற எடுத்துரைக்கும் பான்மையைக் கண்டு இரக்கப்பட்டும் நீதிபதிகள் ஏமாந்துவிடக் கூடாது' என்றும் கூறியுள்ளார். சில நீதிபதிகள் வக்கீல்களின் பெயரைக் கண்டும், வாக் குத் திறமையைக் கண்டும், ஆடம்பரத்தைக் கண்டும் ஏமாந்து போய் விடுவது வழக்கம். ஆனுல், முத்துசாமி ஐயர் இவைகளையெல்லாம் கண்டு ஏமாந்து போகக் கூடியவர் அல்லர். அவர் நியாயம் வழங்குவதையே

முதன்மையாகக் கொண்டு தம் வேலைகளைச் செய்து வந்தார். புதிய வக்கீல்களையும் பழைய வக்கீல்களையும் அவர் ஒரேமாதிரி நடத்தி வந்தார்.

முதலாளிகள் வேலைக்காரர்கள் சம்பந்தமாகவும் அவர் சில சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார். இந்து லா சம்பந்தமாக அவர் அநேக நன்மைகளைச் செய்திருக்கின்றார். ஜீவனாம்சத்துக்கு விதிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிட்ட ஒருவனுக்குக் கொடுக்க வேண்டியவன் தன்னுடைய தீய நடத்தைகளினால் பிறகு முன்னிருந்த நிலையில் தான் இல்லாவிட்டாலும் குறைக்கக் கூடாதென்றும், பிள்ளையானவன் தன்னுடைய தகப்பனாரிடமிருந்து சொத்துக்களைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் வயோதிகமடைந்த தன் தாயாரைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான் என்றும், தென்னிந்தியாவிலுள்ள பிராமணர்கள் தங்கையினுடைய பிள்ளையையோ அல்லது குமாரத்தியினுடைய பிள்ளையையோ "சுவீகாரம்,' செய்துகொள்ளுதல் முறையானது என்றும், தகுதியான ஆதாரம் ஒன்றுமில்லாமல் வேலையிலிருந்து நீக்கப்பட்ட "முனிசிபல் கமிஷனர்" ஒருவர் இந்தியா மந்திரிமீது வழக்குத்தொடுக்க உரிமை பெற்றிருக்கிறார் என்றும், வக்கீல் என்ற உரிமையில் வக்கீல்கள் நீதிமன்றத்தில் வழக்கின்போது அளவுக்கு மீறித் தவறிச் சொன்ன வார்த்தைகளுக்காக அவர்கள்மீது கிரிமினல் சம்பந்தமாகவோ, சிவில் சம்பந்தமாகவோ வழக்குத் தொடரக் கூடாதென்றும் தெளிவுபடக் கூறியிருக்கின்றார்.

நீதிமன்றத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த அபிப்பிராயமும் கவனிக்கத்தக்கதாகும். "நீதிமன்றம் என்பது ஒரு புனிதமான கோயிலாகும். நீதிமன்றத்தில் இருந்து நீதியை வழங்குகிறவர்கள் உண்மையைக் கண்டறிய நியமிக்கப்பட்டவர்களாவார்கள். நீதிமன்றக் கோயிலுக்குள் கெட்ட எண்ணத்துடன் நுழைகிறவர்களும், நியாயத்திற்கு ஒவ்வாத காரியங்களினால் நீதிமன்றத்திற்குக் கெடுதலை உண்டாக்கி அதைப் பாழ்படுத்துகிறவர்களும் கடவுளுக்கும் தங்கள் நாட்டுக்கும் தீமை செய்தவர்களாவார்கள்," என்று ஐயரவர்கள் கூறியுள்ளார்கள். அவர் எவ்வழக்கிலும் உண்மையை எப்படியாவது கண்டறிவார்.

## 10. முத்துசாமி ஐயரும் கல்வியும்

1872-ஆம் ஆண்டில் முத்துசாமி ஐயர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினரானார்; பிறகு அதன் நிர்வாக சபையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தாம் இறக்கும் வரையில் இப்பதவியை வகித்திருந்தார். அவர் பி. எல்., எம். எல்., தேர்வுகளுக்கு ஆய்வாளராகவும் இருந்தார். 1882-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு அவர் ஒரு சொற்பொழிவு ஆற்றி இருக்கிறார். அச்சொற்பொழிவு அநேகம் உயரிய கருத்துக்களைத் தன்னகத்துக் கொண்டிருப்பதுடன் சிறந்த கருத்து உள்ளதாகவும் இருக்கின்றது. சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு முதன் முதல் சொற்பொழிவாற்றிய இந்தியர் முத்துசாமி ஐயரவர்களே யாவர். ஐயரவர்கள்

பேசுவதில் அவ்வளவு கெட்டிக்காரராயிராவிட்டாலும், அவர் எழுதி வாசிக்கும் செய்தி பல்லோராலும் மெச்சத் தக்கதாய் இருக்கும்.

முத்துசாமி ஐயரவர்கள் மாணவர்களுக்கு உடற் பயிற்சி தேவையென்றும், போதுமான உடற்பயிற்சி இருந்தால்தான் மாணவர்கள் கல்வியில் முன்னேற்ற மடைந்து தங்களுக்கும் தங்களுடைய நாட்டினருக்கும் நன்மை செய்யக் கூடுமென்றும் தெளிவு படக் கூறி இருக்கின்ருர். பின்னும் இந் நாட்டில் பெற்ருேர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் எவ் வளவு அக்கறை காட்டுகிருர்களோ, அவ்வளவு அக் கறை அவர்களின் உடற்பயிற்சியில் காட்டுவதில்லை என்றும் கூறியிருக்கின்ருர். பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் உடற்பயிற்சியில் கவலை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், உடற்பயிற்சியைப் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் கட்டாயமாகக் கற் பிக்க வேண்டுமென்றும், உடற்பயிற்சியில் அக்கறை கொள்ளாத கல்லூரிகளுக்கும் பாடசாலைகளுக்கும் அரசாங்கத்தார் பண உதவி செய்யக் கூடாதென்றும் அவர் கூறியுள்ளார். உபாத்தியாயர் பாடங்களைப் போதிக்கும்போது பலவித மேற்கோள்களாலும் உவ மானங்களாலும் மாணவர்களிடையே மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டு மென்றும், பிள்ளைகள் பிற்காலத் தில் சிறப்பு அடைவதற்கு ஆசிரியர்களே பெரும்பா லும் பொறுப்பாளிகளா யிருக்கிருர்களென்றும், சிறு வயதில் பிள்ளைகள் ஆசிரியர்களுடைய குணங்களை அறியாவிட்டாலும், பிறகு அவர்கள் ஆசிரியர்களின்

குணங்களை அறிந்து பாராட்டுவார்களென்றும், நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆங்கிலக் கல்வியுடன் நாட்டு மொழியும் நன்கு வளர வேண்டுமென்றும், நாட்டு மொழிகளின் மூலமாகக் கல்வியைக் கற்பிப்பது எளிது என்றும், ஒவ்வொருவரும் அவரவருடைய நாட்டுக் கலைகளையும், நாகரிகத்தையும், இன்னும் இவை போன்ற பிறவற்றையும் தெரிந்திருக்க வேண்டுமென்றும், நல்ல நடத்தைக்கு அடிப்படையாயுள்ள செய்திகளும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முத்துசாமி ஐயரவர்கள் மாணவர்கள் தங்கள் நாட்டு மொழிகளைப் பயில வேண்டுவது முக்கியமென்றும், நாட்டு மொழிகளில் இன்னும் அதிக உரைநடை நூல்கள் ஏற்பட வேண்டுமென்றும், செய்யுள் நூல்கள் கற்றறிந்தவர்களுக்கே பயன்படுகின்றன என்றும், உரைநடை நூல்களோ எல்லா மக்களாலும் படித்தறிந்து கொள்ளக் கூடியவைகளா யிருக்கின்றன என்றும், ஆகவே, மக்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ற நல்ல உரைநடை நூல்களை எழுதி வெளிப்படுத்த வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார். பின்னும் அவர் இந்தியர்கள் தாவரக்கலை, வைத்தியக்கலை, இஞ்சினீயரிங், சட்டக் கல்வி, இந்திய இலக்கியங்கள்: இவைகளைக் கற்க வேண்டுமென்றும், இவைகளைக் கற்பதனால் நன்மை உண்டாகக் கூடுமென்றும், இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கத்தார் உதவி இன்றியமையாதது என்றும், இந்தியர்கள் ஐரோப்பா முதலான வெளி நாடுகளுக்குச் சென்று தங்கள் கல்வியை வளர்த்துக்கொள்வது மிக முக்கிய

மானது என்றும், அதனுல் தீமை ஒன்றும் ஏற்படா தென்றும் கூறி இருக்கின்ருர்.

## 11. முடிப்புரை

முத்துசாமி ஐயரவர்கள் ஒருவர் செய்த நன்றியை மறக்கக் கூடியவரல்லர். தமக்கு நன்றி செய்தவர்களைச் சமயம் நேர்ந்த போதெல்லாம் அவர் புகழ்ந்துரைத் திருக்கின்ருர். தமக்குப் பல வகையிலும் நன்மை செய்த பவல் துரையவர்களை முத்துசாமி ஐயரவர்கள் பலமுறை புகழ்ந்துரைத்தமை அவருடைய மேலான குணத்தைக் காட்டுகின்றது. முத்துசாமி ஐயரவர் களுக்கு டி. கோபால ராவ், அரங்காச்சார்லு, பூண்டி அரங்கநாத முதலியார் ஆகியவரிடத்தில் பெரிதும் மதிப்பு ஏற்பட்டிருந்தது. இவர்களைப் பற்றி அவர் அடிக்கடி தம் சொற்பொழிவுகளில் புகழ்ந்துரைத் திருக்கின்ருர்.

அரசாங்கத்தில் சிறப்பாக மேல் பதவிகளில் உள்ள வர்களிடத்தில் ஒழுக்கம் கட்டாயம் இருக்க வேண்டு மென்றும், ஒவ்வொருவரும் தன்மதிப்பை அடிப்படை யாகக் கொண்டு வாழ வேண்டுமென்றும் ஐயரவர்கள் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் உத்தியோகம் செய்துகொண்டிருக் கிறவர்கள் அரசியல் விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளக் கூடாதென்றும், ஆனுல் அவர்கள் அரசியல் விவகாரங்களைத் தெரிந்திருக்க வேண்டுவது முக்கியம் என்றும் ஐயரவர்கள் கூறியுள்ளார்.

மேலும் ஐயரவர்கள் மக்களுக்குப் பல நன்மையான செயல்களைச் செய்து இருக்கின்றார். அவர் இந்திய நாடு பலவிதத் தொழில் துறைகளில் உயர்வடைய வேண்டுமென்று கூறியிருக்கிறார். மாணவர்களுக்குத் தொழிற் கல்வி முக்கியம் என்பதையும் அவர் வற்புறுத்தி இருக்கின்றார்.

இந்தியர்களுக்குள் ஒற்றுமை இல்லாமை பெருங் குறையென்றும், அக்குறையை நீக்க ஒவ்வோர் இந்தியனும் பாடுபட வேண்டுமென்றும், பழைய பழக்க வழக்கங்களை அவைகளினால் கெடுதல் உண்டாகிறது என்று செவ்வையாகத் தெரிந்த பிறகு மேற்கொண்டிருத்தல் கூடாதென்றும், இதனால் எல்லா விதமான பழக்க வழக்கங்களையும் "மூடக் கொள்கைகள்" என்று புறக்கணித்துவிடக் கூடாதென்றும், எப்போதும் நாட்டுப்பற்றை விட்டு விடக் கூடாதென்றும், எந்தச் செயலையும் ஆழ்ந்து நோக்கி அறிவுடன் செய்ய வேண்டுமென்றும், இந்தியர்கள் ஒன்றாக அன்புடனிருந்து இந்தியாவின் உயர்வுக்கான துறைகளில் உழைக்க வேண்டுமென்றும் ஐயரவர்கள் கூறி இருக்கின்றார்.

ஐயரவர்கள் சீர் திருத்தச் சம்பந்தமாகவும் பாடுபட்டு இருக்கின்றார். பெண்கல்வி தேவை என்பதை அவர் உணர்ந்து, அதை நமது நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்திருக்கின்றார். பாலிய விவாகத்தை அவர் கண்டித்திருக்கின்றார். வயது வந்தபின் நடக்கும் திருமணம் நியாயத்திற்கு விரோதமாகாதென்றும், இளமையிலேயே விதவைகளான பெண்களுக்கும், வயதானபின் மணமான பெண்கள் கணவனுடன் கூடி

Wx N53

வாழப்புகுமுன் மங்கலியம் இழந்தவர்களானால் அவர்களுக்கும் மறு மணம் செய்துவைக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

மக்களில் ஒவ்வொருவரும் இறைவனிடத்தில் அன்பு பூண்டு ஒழுகவேண்டுமென்றும், அன்பே மனிதனைக் கரையேற்ற வல்லது என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

ஐயரவர்கள் ஒரு செய்தியைப்பற்றி மூன்றுதரம் படித்து விட்டால், பிறகு, எப்பொழுதும் அதை மறக்கவே மாட்டார்; தாம் ஆராய்ந்த வழக்கின் விவகாரங்களை ஆறு மாத காலமானாலும் மறவாமல் மனத்தில் வைத்திருந்து தீர்ப்பு எழுதுவார்.

முத்துசாமி ஐயர் இயற்கை விநோதங்களையும், சித்திரம், சிற்பம் ஆகியவற்றின் சம்பந்தமான செய்திகளையும் பெரிதும் போற்றிவந்தார். அவருக்கு இசையில் எப்போதும் விருப்பம் உண்டு.

இத்தகைய அரிய பலவித குணங்களைக் கொண்ட இப் பெரியாரின் உருவம், எல்லோரும் காணவேண்டும் என்ற காரணத்தினால், சிறந்த சலவைக் கல்லால்செய்யப் பெற்றுச் சென்னை உயர்நீதிமன்றத்தில் முக்கியமான இடத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. அவ்வுருவச் சிலையைக் காணும் ஒவ்வொருவரும், முக்கியமாக இளைஞர்கள், ஐயரவர்களைப் போலத் தாங்களும் உயர்வடைய வேண்டுமென்று நினைப்பார்களென்று நாம் நம்புகின்றோம்.

108710

'தோன்றிற் புகழொடு தோன்றுக.'



அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

....மண்ணடி சென்னை....